(9)

துரையப்பாவின் விண்ணப்பத்தை நீதியரசர் நிராகரித்தார்!

ரூ.2,500 செலவுத்தொகை கட்டும்படி உத்தரவு

(கொழும்பு நிருபர் பெரி. சுந்தரலிங்கம்)

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணையை இம்மாதம் 7-ம் திகதியிலிருந்துஒரு மாதகாலத்துக்கு ஒத்திவைக்கும்படி மனுதார் திரு. அல்பிரட் துரையப்பா சார்பில் அவரின் வழக்கறிஞர் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நீதியரசர் திரு. பண்டித குணவர்தனை நேற்று நிராகரித்தார்

இந்தியாசென்ற மனுதாரர் திரு. துரையப்பா சுகயீனமாக இருப்பதாக திருச்சியிலுள்ள அரசாங்க மருதுவமனை டாக்டர் ஒருவரிடம் பெற்ற வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றையும் இணைத்து, நான்கு வார காலத்துக்கு வழக்கை பின் போடும்படி இந்தமனுவை வழக்கறிஞர் தாக்கல் செய்தார்.

மருத்துவச் சான்றிதழ் திருப்திகரமானதாக இல்லையென்றும், மனுதார் நீதிமன்றத்தில் சுகயீனமாக இருக்கிறாரெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதேயொழிய மருந்துவச் சான்றிதழில் அவர் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்க முடியாதெனத் தெரிவிக்கப்படவில்லையென்றும் நீதியரசர் பண்டித குணவர்த்தனை தெரிவித்தார்.

வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி மனுதாரர் கேட்பது ஆச்சரியமளிக்கவில்லையென்றும், நவம்பர் 7-ம் திகதி மனுதாருக்கு நல்ல நாளில்லையென்றும், ஒத்திவைக்கும் மனுவை ஒரு விண்ணப்பம் வரப்போவதாக எட்டு நாட்களுக்கு முன்னர் சக வழக்கறிஞர்கள் பேசிக் கொண்டதாகவும் எதிர் மனுதாரர் திரு. சி எக்ஸ் மார்ட்டின் சார்பில் ஆஜரான திரு நவரத்தினராசா கியூ. எல். நீதிமன்றத்தில் கூறினார்.

26-ம் திகதி மனுதாரர் இந்தியாவுக்கு சென்றுரென்றும், 27-ம் திகதி மருத்துவ பதற்கு சோரப்படுகிற வச் சான்றிதழைப்பெற்றுள் ளாரென்றும், எப்படியா வது 7-ம் திகதி விசார ணையை ஒத்திவைப்பதே மனுதாரரின் நோக்கமாக இருக்கிறதென்றும் எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

மருத்துவச் சான்றிதழில் 7-ம் திகதி நீதிமன்றத்தில் சமூகமளிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட வில்லையென்பதை வழக்கறிஞர் நவரத்தினராசா கியூ எல் சுட்டிக்காட்டினார்

மனுதாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரித்த நீதியரசர் திரு. பண்டித குணவர்த்தனை, எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் செலவுத் தொகையாக 1500 ரூபாயையும் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட மற்றெரு அபேட்சகரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வழக்கறிஞரின் செலவுத் தொகையாக 500 ரூபாயையும், முடிக்குரிய வழக்கறிஞரின் செலவுத் தொகையாக 500 ரூபாயையும் மனுதாரரைக் கட்டும்படி உத்தரவிட்டார்.

'மருத்துவச் சான்றிதழ் குறித்து எதிர் மனுதாரர் எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டாலும்கூட நீதிமன்றத்துக்குத் திருப்திகரமாக அது இருக்க வேண்டும்' என்று நீதியரசர் கூறினர்.

நவம்பர் 7-ம் திகதி மனுதாருக்கு நல்ல நாளில்லை யென்பதாலேயே ஒத்திவை

யாழ். தேர்தல் ஆட்சேப வழக்கு 25ல் நடக்கும்

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை இம்மாதம் 25-ம் திகதி நடைபெறுமென்று நீதியரசர் திரு. பண்டித குணவர்த்தனை நேற்று அறிவித்தார்.

மனுதாரர் திரு. துரையப்பா சார்பில் அவரின் வழக்கறிஞர் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதியரசர் திரு. பண்டித குணவர்த்தனை, எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் செலவுத் தொகையாக 1500 ரூபாயையும் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட மற்றெரு அபேட்சகரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வழக்கறிஞரின் செலவுத் தொகையாக 500 ரூபாயையும், முடிக்குரிய வழக்கறிஞரின் செலவுத் தொகையாக 500 ரூபாயையும் மனுதாரரைக் கட்டும்படி உத்தரவிட்டார்.

'மருத்துவச் சான்றிதழ் குறித்து எதிர் மனுதாரர் எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டாலும்கூட நீதிமன்றத்துக்குத் திருப்திகரமாக அது இருக்க வேண்டும்' என்று நீதியரசர் கூறினர்.

நவம்பர் 7-ம் திகதி மனுதாருக்கு நல்ல நாளில்லை யென்பதாலேயே ஒத்திவை

''எண்ணெயில் பொரித்த சாப்பாட்டைச் சாப்பிட்டால் வருவதுபோன்ற 'நோ'தான்மருத்துவச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நோய் ஆரும் புற்று நோய் முற்றிவிட்ட நோயாளிகள் கூட இலங்கையிலிருந்து லண்டனுக்கு விமானத்தில் போய்வருகிறார்கள் அப்படியிருக்க, திருச்சியிலிருந்து இங்குவர முடியாதா?

''மனுதார் துரையப்பா இந்த மருத்துவச்சான்றிதழை இந்தியாவிலிருந்து அனுப்பியிருப்பதற்குக் காரணமில்லாமலில்லை இங்கிருந்து அனுப்பியிருந்தால் டாக்டர் ஒருவர் அனுப்பப்பட்டு அவர் பரிசோதனைக்குள்ளாக்கப்படுவார் என்பது அவருக்குத் தெரியும்.

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE ELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 264
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 17 றமழான் 3 செவ்வாய்க்கிழமை (3-11-70)

ஈழநாடு சந்தா

	நினைப்பதிப்பு	வாரப் பதிப்பு
3 மாதம்	ரூ. 22-00	ரூ. 4-00
6 மாதம்	ரூ. 42-00	ரூ. 7-50
ஒரு வருடம்	ரூ. 82-00	ரூ. 14-00

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

வங்கிகளில் போடும் பணம் பற்றி கவலை வேண்டாம்

நிதி அமைச்சர் விளக்கம்

கோட்டை, செவ்வாய்

''வங்கிகளில் தங்கள் பணநோட்டுக்களைக் கணக்கு வைத்தவர்களோ இனிமேல் வைப்பவர்களோ அப்பணத்தைக் குறித்துப் பயப்படத்தேவையில்லை''

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பொது மக்களுக்கு பத்திரிகை மூலம் விடுத்தசெய்தி யொன்றில்மேற்கண்டவாறு அபயமளித்துள்ளார். அச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மக்கள் தாங்கள்வங்கியில் கணக்குவைக்கும் பணத்தின் பெறுமதி குறைந்து விடுமென்றே பறிமுதல் செய்யப்படுமென்றே அல்லது வேறுவகையில் துன்பத்துக்குள்ளாக வேண்டுமென்றே பயப்படவேண்டியதில்லை வருமானவரி கட்டாவிட்டாலே அவை அறவிடப்படும்.

இன்று முதல் பொருட்கள் வாங்குவதற்கோ அல்லது,எவ்வித வர்த்தக காரியர்களுக்கோ பழைய 100 ரூபா 50 ரூபா நோட்டுக்கள் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனல் இப்பணத்தின் பெறுமதிமுற்றாக இல்லாமல் போய்விடவில்லை. இப்பணத்தை வைத்திருப்பவர்கள் வங்கியிலோ. தபால் கந்தோரிலோ போட்டுவைக்கலாம். இந்தப் பணத்தை வைத்திருப்பவர்கள் வங்கியில் போடுபவர்களுடையவராய் இருந்தால் அத்துடன்

வல்வெட்டித்துறையில் அனுபவம்:

ஒரே வீட்டில் நான்கு தொலைபேசி இணைப்பா?

பொலிஸ் கோஷ்டிக்கு ஒரே வியப்பு!

யாழ்ப்பாணம், செவ்வாய் வெட்டித்துறையில் இரு வல்வெட்டித் துறையில் வீடுகளில் நடாத்திய திடீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழரசுக் கட்சித் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில், கூட்டு முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத் தூதுக்குழுவொன்று நேற்று பேட்டி கண்டது.

இனப்பிரச்சினை நியமனம் ஆகியன உட்பட பல முக்கிய பிரச்சினைகளைத் தமிழ் அரசுக் கட்சியினர் பிரதமரிடம் எடுத்துக் கூறியதாக அறியப்படுகிறது.

பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் தமிழரசுக் கட்சித் தூதுக்குழு திருப்தியடைந்துள்ளதாக கட்சிப் பிரமுகர் ஒருவர் சொன்னார்.

'சங்கிலி மன்னனுக்கும் விழா வேண்டும்'

'ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் பண்டார வன்னியனுக்கு நன்றிக்கடன் செய்யும் நோக்கமாகவன்னி மக்கள் வருடந்தோறும் விழா எடுத்துவருவது வரவேற்கத்தக்கது. மன்னன் மொழிகாக்க இனம் காக்க நிலம்காக்கவே வாளேந்தி பிரங்கு முன்பாக்கு முன் வீரப் போர் புரிந்தான். வன்னி நாட்டை ஆண்டாலும் அந்நியனை எதிர்த்துப்போரிட்ட மாவீரன் என எண்ணும் பொழுது இலங்கை வாழ் பொதுமக்கள் யாவரும் போற்ற வேண்டியவனே பண்டாரவன்னியன்'

இவ்வாறு பண்டாரவன்னியன் கழகத்தின் ஆதரவில் கற்சிலைமடுவில் நடைபெற்ற பண்டாரவன்னியன் நினைவு விழா காலை நிகழ்ச்சிகளின்போது ஒட்டுசுட்டான் அ. த. க. பாடசாலைத் தலைமையாசிரியரும், இன்னாள் ஆசிரியர் தரிசியுமான திரு. க. சத்தியானந்தசிவம் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'எதிர்காலப் பிரஜைகளான இன்றைய மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பண்டாரவன்னியனை மட்டுமன்றி சங்கிலிய மன்னனையும், விக்கிரமராஜசிங்கன் போன்ற மன்னர்களின் சரித்திரங்களையும் புகட்ட முன்வர வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணம் வாழ் தமிழ் மக்கள் சங்கிலிய மன்னனுக்குச் சிலை எழுப்பி விழாவெடுக்க முன்வராதுவிட்டனர். அந்நியராகியபோர்த்துக்கேயரை எதிர்த்து வீரப்போர்செய்த மாவீரன் சங்கிலியன் புகழ் மங்கிக்கிடப்பது வருந்தத்தக்கது. அவனின் ராஜதானியாகிய சங்கிலியன் தோப்பு பாதுகாப்பான முறையில் இருந்தால்தான் சங்கிலியனை எதிர்காலம் அறியக்கூடியதாகஅமையும்'

ஒரே வீட்டில் நான்கு தொலைபேசி இணைப்பா?

பொலிஸ் கோஷ்டிக்கு ஒரே வியப்பு!

யாழ்ப்பாணம், செவ்வாய் வல்வெட்டித்துறையில் பொலிஸ் கோஷ்டி ஒருவரது வீட்டில் நடாத்திய திடீர் சோதனையில் பதினேயாயிரம் ரூபாய் பழைய நோட்டுக்களுடன், 100 ருத்தல் அபினும் இருக்கக்கண்டு பிடித்தனர் நோட்டுக்கள் வங்கியில் போடப்பட்டதுடன், அபின் சம்பந்தமாக வீட்டுச் சொந்தக்காரரான பாலசிங்கம் என்பவர் பொலிஸ் விசாரணைக்குள்ளாக்கப்பட்டார்.

யாழ். உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ஸ் திரு. ராஜகுரு, ஜோக்கிம் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் வல்வெட்டித்துறையில் இரு வீடுகளில் நடாத்திய திடீர் சோதனையின்போது ஒரே வீட்டில் நான்கு தொலைபேசி இணைப்புக்கள் இருக்கக் கண்டு வியந்தார்கள்.

அடுக்களைக்குள்ளும் படுக்கையறைக்குள்ளும் கட்டிலுக்கிக்கிழும் தொலைபேசி இணைப்புக்கள் இருக்கக்கண்டனராம்!

குறுநகரில் ஒரு வீட்டைச் சோதனையிட்டபோது பதினேந்து மேல்நாட்டுப் பெண்களின் நிர்வாணப்படங்கள் இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டு ஒருவர் விசாரணைக்குள்ளாக்கப்பட்டாராம்.

பன்றி என நினைத்து சுட்டாராம்; ஆள் பலி!

புதுக்குடியிரு பு, திங். காட்டில் கொடி பறித்துக் கொண்டு நின்றவரை எதிர் பாராதவிதமாகத் துப்பாக்கிக்குண்டு பலிகொண்டது. இச்சம்பவம் புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. புதுக்குடியிருப்பு வாசியான 50 வயதடைய யோசேப்பு எம்பவரே இவ்விதம் பரிதாப மரணத்திற்குள்ளான வராவர்.

வயல் வேலி கட்டுவதற்கு யோசேப்பு காட்டில் மாங்கொடிகளைப் பறித்துக் கொண்டு நின்றதாகவும் அப்போது வாழைத் தோட்டத்திற்கருகாமையில் சதி தம் கேட்பதை உணர்ந்த காவலாளி பன்றி என நினைத்துச் சத்தம் வந்த திசையில் துவக்கினுல் சுட்டதாகவும், பின்னர் ஸ்தலத்தில் சென்று பார்த்தபோது யோசேப்பு விழுந்து கிடந்ததாகவும், உடனே புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட சிறிது நேரத்தில் யோசேப்பு இறந்துவிட்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கு

வாக்குச் சீட்டுக்களை திரும்ப எண்ணும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

மனுதார் ரஹீம் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ். மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கில் வாக்குச்சீட்டுக்களைத் திரும்ப எண்ண வேண்டுமென்ற மனுதாரின் கோரிக்கையை நீதியரசர் நிராகரித்தார். மூன்றாவது எதிர்மனுதாரரான தேர்தல் அதிகாரி சார்பில் ஆஜரான முடிக்குரிய வழக்கறிஞர் ஈ. பி. எஸ். பி. சில்வா வாக்குச் சீட்டுக்களை திரும்ப எண்ணக் கூடாதென்ற ஆட்சேபத்தை நீதியரசர் ஏற்றுக்கொண்டு இவ்வாறு தீர்ப்பளித்தார்.

மன்னர் தேர்தல்ஆட்சேப வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று 15வது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

நேற்று மனுதாரரான ரஹீம் சாட்சியமளித்த போது கூறியதாவது: மன்னர் பட்டின சபையில் இறைச்சி, மீன் கடைகள் ரெண்டருக்கு விடப்படும் இவ்வருடம் மாட்டு இறைச்சிக்கடைக்கான ரெண்டர் விடப்பட்டது. இருவரிடம் ணப்பித்திருந்தார்கள். சபை கூடிய தொகை கேட்டவருக்குக்கொடுக்கவில்லை. இந்த வியாபாரத்தில் அனுபவ முள்ளவருக்கே ரெண்டர் கொடுப்பதென சபை முடிவு செய்திருந்தது. மற்றவர் இவ்வியாபாரத்தில் அனுபவ முடையவராய் இருந்தபடியால் அவருக்கு ரெண்டர் கொடுப்பதென சபை முடிவு செய்தது. கூடக்கேட்ட தொகையை அவர் செலுத்தச்சம்மதித்தார். அதனால் சபையின் முடிவின்படி நான் நடந்துகொண்டேன்.

கடந்த தேர்தலில் நான் வீட்டுக்கு வீடு சென்று ஆதரவு திரட்டினேன். நியமனதினத்திற்கு இரு வாரங்களுக்குப் பின்னரே முசலிப் பகுதிக்கும் சென்றேன். அப்பொழுது அழகக்கோனைக் கண்டேன். நியமனத்திற்குப் பின்னர் எனது தாயார் வீட்டில்தங்கியிருந்தேன். அங்கே என் சகோதரரும் சகோதரியும் இருந்தனர்: தேர்தல் முடியும்வரை அங்குதான் இருந்தேன். கடந்த தேர்தலில் மூன்று பேர் மன்னர் தொகுதியில் போட்டியிட்டார்கள். எனக்கும் எதிர் மனுதாருக்குமிடையில் 69 வாக்குகள்தான்வித்தியாசம் இருந்தது. அழகக்கோனுக்கு 10,697வாக்குகளும் எனக்கு 10,628வாக்குகளும் கிடைத்தன.

மனுதாரரான ரஹீம்சாட்

(4-ம் பக்கம் பார்க்க)

142 பேர் தீயில் மாண்டனர்

பிரான்ஸில் சம்பவம்

பாரிஸ், நவ. 2

பிரான்ஸிலுள்ள கிரோபின்ஸ் அருகே உள்ள நகர மண்டபத்தில் ஏற்பட்ட தீவிபத்தொன்றில் 142 இளைஞர்கள் தீயில் வெந்து மடிந்தார்கள்: அந்நகரமண்டபத்திலிருந்து 32 பேரே தப்ப முடிந்தது. 12 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். விபத்து எவ்வாறு ஏற்பட்டது தென்பது தெரியவில்லை. தீவிபத்துபற்றி விசாரணை நடைபெறுகிறது.

'தொழிலாள வர்க்கத்தின் இரட்சகர்'

அம்பன், திங்கள் குடத்தனை கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் சபையின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சபையின் உபதலைவர் திரு. கே. கே. சிவசாமி பேசுகையில், நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டிப் பேசினார். டாக்டர் என். எம். தொழிலாளவர்க்கத்தின் இரட்சகர் என அவர் குறிப்பிட்டார்.

விதை கிழங்கு விலை உயர்வு

தாவடி, திங்கள் விதை உருளைக் கிழங்கின் விலை முன்னெப்போதுமில்லாதளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் இதனால் உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகள் பெரிதும் கஷ்டமுறுவதாகவும் தெரிகிறது.

யாழ். தேர்தல் ஆட்சேப வழக்கு 25ல் நடக்கும்

மன்னர் தேர்தல்ஆட்சேப வழக்கு விசாரணை இம்மாதம் 7-ம் திகதிக்கு முன்னர் முடிவடையாதென்பதால், யாழ்ப்பாணம் தேர்தல்ஆட்சேப வழக்கு விசாரணை இம்மாதம் 25-ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது. இம்மாதம் 7-ம் திகதி இவ்விசாரணை நடைபெறவிருந்தது. இவ்வழக்கு விசாரணை யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.

வட்டுக்கேட்டை தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணையும் முன்னர் குறிப்பிட்டபடி இம் மாதம் 14-ம் திகதி நடைபெறமாட்டாது டிசம்பர்மாதத்தில்ஒருதிகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மனுதாரைக் கட்டும்படி உத்தரவிடப்பட்ட செலவுத் தொகை கூடிவிட்டதாக மனுதார் வழக்கறிஞர்கூறிய போது, 'பணத்திலுகிதான் பாடம்படிப்பிக்கவேண்டும்' என்று எதிர்மனுதாரின் வழக்கறிஞர் திரு. நவரத்தினராசா கூறினார்.

டாக்டர் என். எம். எச்சரிக்கை

கும்மாளமடிக்கும் முதலாளிகளுக்கு

விரைவில் அடுத்த துருப்பு

கொழும்பு, திங்கள் 'பதுக்கி வைத்திருந்த பணத்தையெல்லாம் புது நோட்டுக்களாக மாற்றிவிட்டதாக சில முதலாளிகள் கும்மாள மடிக்கிறார்களாம். ஆனால் இவர்கள் எனது அடுத்த 'துருப்பிலிருந்து தப்பிவிட முடியாது' என்று நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா எச்சரிகையொன்றை விடுத்தார்.

ரூவெல்லியில் நடந்த கூட்டமொன்றில் அவர் பேசுகையிலேயே இப்படிஎச்சரித்தார்.

'கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பவர்கள் விரைவில் அகப்பட்டுத் திணறப் போகிறார்கள். இந்த 'துருப்பி'லிருந்து தப்பிக் கொள்ள வழியே இல்லை!' என்றார் டாக்டர் என். எம்!

காலி எம். பி. டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா ஆட்சிமன்றத்தில் கேட்ட கேள்வியொன்றுக்கு நிதி மந்திரி டாக்டர் என். எம். இன்று பதிலளிக்கையில் தங்கம் வெள்ளியை மக்கள் உபயோகிப்பதற்கு ஊக்கம் கொடுக்கப்பட மாட்டாதென்றும், அதற்கேற்ப சட்டம் கொண்டுவரப்படுமென்றும் தெரிவித்தார்.

.....

கேதீச்சரத்தில் சூரன்போர்

யாழ்ப்பாணம், செவ். பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி கந்தஷஷ்டியை முன்னிட்டு முருகப் பெருமானுக்கு விசேட அபிடேகங்களும் பூசைகளும் நடைபெறுகின்றன, ஷஷ்டி தினமாகிய நாளை புதன்கிழமை சூரன் போர் விழாவும், மறுநாள் வியாழக்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறும்

ஜீவனுஞ்சம் கட்டாதவருக்கு 10 மாதச் சிறை

முல்லைத்தீவு, திங்கள் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கோபாலசிங்கம் என்பவரின் மனைவி சரோஜினிதேவி தன்னையும் தனது மகனையும் சென்ற 10மாதங்களாகத் தனது கணவன் கோபாலசிங்கம் பராமரிக்கவில்லையென்றும். இதனால் தனக்கும்பிள்ளைக்கும் ஜீவனுஞ்சம் பெற்றுத்தரும்படியும் கோரி முல்லைத்தீவு நீதிபதிமுன் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். பதில் நீதிபதி திரு. மேவின் விஜயசிங்க முன் இம்மனு விசாரணைக்கெடுக்கப்பட்ட போது 'பணம் கட்டுகிறயா' என்று பிரதிவாதியிடம் கேட்கப்பட்டது. பிரதிவாதி இல்லை என்று கூறவே நீதிபதி 10 மாதப் பணம் கட்டாதகுற்றத்திற்கு 10 மாதம் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

குத்தகைக் காணிகள் கூவிகரிப்பு

கோட்டை, திங்கள் கடந்த அரசாங்கத்தினுல் குத்தகைக்கு வழங்கப்பட்ட 20 ஆயிரம் ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்காணிகளை நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பம்

உடுப்பிட்டி, திங். யாழ். கலிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி 1970—1971 ம் கழகவாண்டுக்கான புதிய பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் கடந்த 1-ம் திகதி ஆரம்பமாகின.

திருத்தம்

அடைவு நகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் 9-11-70-ல் நடைபெறும் என்று அறிவித்திருந்த மேற்படி ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறோம். இதன் சரியான திகதி குறித்து மீண்டும் விளம்பரம் செய்யப்படும். முகாமையாளர், யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி, ஊர்காவற்றுறைக் கிளை.

2538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - நல்லூரில் பெரிய வளவுடன் புதிய வீடு விற்பனைக்கு அல்லது ஈட்டுக்குக் கிடைக்கும். பழைய பணம் ஏற்றுக் கொள்வோம். நேரில் வரவும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2382

ஆதனம்:
பரந்தன் பூநகரி றேட்டில் எட்டாம் கட்டையடியில் பண்படுத்தப்பட்ட முப்பது ஏக்கர் நெற்காணி. காலபோகத்தில் சராசரி விளைவு ஏக்கருக்கு ஐம்பது புசல். லான்ட் இன்வெஸ்ற்மென்ற், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2379

பியானோ (இங்கிலிஸ் மேக்) நல்ல நிலையில் உள்ளது, ரூபாய் 3,500/- பெறுமதியானது. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். நம் 229, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 2387

நல்ல நிலையில் ஓடக்கூடிய சொந்தப் பாவிப்பிலுள்ள CY 8900 கில்மன் கார் விற்பனைக்கு உண்டு. "இராசமனை", சன்னிதி வீதி, அச்சுவேலி. 2390

தேவை

வட்டிக்கு ரூபா 4000/- மிக அவசரமாகத் தேவை. விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 2388, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2388

வவுனியாவிலுள்ள நியூ நித்தியானந்தபவான் சைவ ஹோட்டலுக்கு நன்கு அனுபவமுள்ள சகல வேலைகளும் தெரிந்த சமையல்காரர்களும் சப்ளையர்களும் தேவை. விபரங்களுக்கு: ஸ்ரீ முருகன் அச்சகம், 104, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளவும். 2389

காணவில்லை

மண்ணிறமுடைய 'பொமிநேரியன்' (Pomenerian) பெண்கற் நாய் 1-10-70 தொடக்கம் காணவில்லை. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். கே. இராமலிங்கம், 10, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2385

வகுப்புக்கள்

சங்கீதம்:
வாய்ப்பாட்டு, வீணை, ஜலதரங்கம் ஆகியவற்றில் சங்கீத வித்துவான் செல்வி சௌபாக்கியலக்ஷ்மி மாணிக்கத்தினால் பின்வரும் விலாசமுடைய இடங்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1. 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2. மூளாய் மலை, மானிப்பாய். வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் பயிற்றப்படுவார்கள். தொடர்பு கொள்பவர்கள் 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்தில் வந்து நேரில் சந்திக்கலாம். 2386

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 3—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 வளரும் பயிர்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 விவசாய நிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 ஐ நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கேள்வி விளம்பரம்

கிளிநொச்சிப் பட்டின சபை

கிளிநொச்சிச் சந்தை மைதானத்தில் ஆட்டிறைச்சிக் கடைகள் இரண்டும், மாட்டிறைச்சிக் கடைகள் இரண்டும், பரந்தன் சந்தை மைதானத்தில் ஆட்டிறைச்சிக் கடை ஒன்றும், மாட்டிறைச்சிக்கடை ஒன்றும் அமைத்து 1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரையிலான காலத்துக்குக் குத்தகையாக எடுத்து இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் திகதி முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப் பணம் ரூபா 200/-. கேள்விப்பத்திரப்பணம் (திருப்பிக் கொடுபடமாட்டாது) ரூபா 10/- செலுத்தி 17-11-1970 பிற்பகல் 3-00 மணி வரை இச்சபை அலுவலகத்திலிருந்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் விண்ணப்பஞ் செய்வதின் பேரிலோ அன்றி நேரிலோ பட்டினசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டினசபை.
கிளிநொச்சி.

பட்டினசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
31-10-70. 2535

வலி மேற்கு த. ஆ. சங்கம்

யாழ்ப்பாணம், செவ்.

வலிகாமம் மேற்கு தமிழாசிரியர் சங்கவருடாந்தக் கூட்டம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் தலைவர் திரு. க. நல்லதம்பி தலைமையில் நடந்தது தலைவர் தமது தலைமையுரையில் "தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தினால் வரவேற்கப்படுகின்ற இக்காலத்தில் ஆசிரியர்கள் சங்கத்தில் அங்கத்தவராய் இருக்கவேண்டியது அவசியம்" எனக்கேட்டுக் கொண்டார்.

காரியதரிசி தமது அறிக்கையில் ஆசிரியசங்கங்களின் ஒற்றுமைக்குரலே ஆசிரியர் குறைகளைப் போக்கவல்லது எனக் குறிப்பிட்டார்.

அகில இலங்கைத் தமிழாசிரியசங்கப் பொதுக் காரியதரிசி திரு. க. இ

திரைப்படவிமர்சனம்

செல்லப் பெண்

'செல்லப்பெண்' அப்பாவுக்குமட்டுமல்ல பார்ப்பவர் அனைவருக்குமே அவள் செல்லப்பெண் தான். ஆனாலும் அவள் வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய வயதில் வாழக்கொடுத்து வைக்கவில்லையே! பாவம்!

யாழ்ப்பாணம் 'ராஜா' தியேட்டரில் காட்சியளித்துக்கொண்டிருக்கும் செல்லப்பெண்ணைத்தான் சொல்கிறேன். அவள் அழகி, மூகி மட்டுமல்ல பண்புள்ளவளும் கூட! இங்கிதம் அறிந்து நடந்துகொள்பவள்.

அப்பா- அம்மாதான் அவளுக்கு மாப்பிள்ளை பேசி திருமணத்திற்கு நிச்சயதார்த்தமும் செய்தார்கள். மாப்பிள்ளையின் அவசரமும் சந்தர்ப்ப சூழ்நிலையும் அப்படியா வந்துசேரவேண்டும்!

ஊர்வம்புக்காரன் விடுத்த சவாலை ஏற்ற அவளின் தந்தை தான் வளர்த்து ஆளாக்கிய அனாதைக் கண்ணனையே மருமகனாக்கிக் கொள்ள முடிவுசெய்கிறார். பெற்றோர் நிச்சயித்த மாப்பிள்ளைக்குத் தன்னையே ஒப்புவித்துவிட்டாலும் அவனைக் காலன் கொண்டுபோய் விட்ட சங்கதி தெரிந்தும் கண்ணனிடம் உண்மையைச் சொல்கிறாள். கண்ணனும் தன் முதலாளியின் மகளின் காதலைப் பெற்றுவிட்ட போதிலும் தன்னை வளர்த்து ஆளாக்கியவர் உயிர் வாழ்வதற்காகத் திருமணம் செய்து கொள்கிறான். என்றாலும் அவளைச் சுடும்நெருப்பாகவே மதித்து ஊராருக்கும் பெற்றோருக்கும் மட்டுமே தம்பதிகளாக காலம் கழிக்கின்றனர். கடைசியில் சாகும் தறுவாயில் செல்லப்பெண் தந்தைக்கு உண்மையைச் சொல்கிறாள். வளர்த்தவனை வாழ்த்திவிட்டு தந்தையும் செல்லப் பெண்ணுடன்போகிறார்.

செல்லப்பெண்ணாக புஷ்பலதாவும் கண்ணனாக ஏ. வி. எம். ராஜனும் செல்லப்பெண்ணின் தந்தை தர்மலிங்கமாக வி. எஸ். ராகவனும் சிறப்பாக நடித்திருக்கின்றனர். சோவும் மனோரமாவும் நகைச்சுவை அளிக்கின்றனர். சோ என்றாலே கிண்டல் என்றுதானே அர்த்தம்! சுந்தரராஜன் எம். ஆர். ஆர் வாசு ஆகியோர் கௌரவ நடிகர்கள். கௌரவமாக நடந்துள்ளனர்.

பாடல்கள் வசனம் நன்றாக இருக்கின்றன. கதையிலும் புதுமை இருக்கிறது. ஒலி, ஒளி வாய்க்கவில்லை!

குடும்பத்துடன் கூச்சமின்றி பார்க்கக்கூடிய படம் செல்லப்பெண்

—திரைவண்

கொழும்பில் தவறணைகள் மூடப்பட்டன

கொழும்பு, திங்கள்

ஞாயிற்றுக்கிழமை நண்பகலிலிருந்து கொழும்பு நகரிலுள்ள சகல தவறணைகளும் மூடப்பட்டன. இன்றும் இவை தொடர்ந்து மூடப்பட்டிருந்தன. செல்லுபடியாக மாட்டாதென பிரகடனப் படுத்தப்பட்ட பழைய 50 ரூபா, 100 ரூபா நோட்டுக்களை வைத்துப் பெருமளவில் மதுபான வகைகளை வாங்கி அவற்றைச் செல்லுபடியாகச் செய்வதற்கு திட்டமிட்ட குழுக்கள் மூலம் முயற்சி செய்வதாகக் கிடைத்த தகவலை தொடர்ந்து தகவல் கமிஷனர் இவ்வுத்தரவைப் பிறப்பி[த்து]ள்ளார்.

சி. பி ஏ)

பணம்போட 'லேபல்' இல்லை

கைதடி, திங்கள்

பழைய 50, 100 ரூபா நோட்டுக்களை மாற்ற முடியாத கைதடிக் கிராமவாசிகள் சிலர் தங்கள் தபால்கந்தோர் சேமிப்புப் புத்தகத்துடன் கைதடி உபதபால் கந்தோருக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

அங்குள்ள உப தபால் கந்தோரில் பாஸ் புத்தகத்தில் பணம் போடுவதற்குரிய 'லேபல்' இல்லாததினாலேயே மக்கள் இவ்விதம் திரும்ப வேண்டியுள்ளதாம்.

தரகர்கள் கைவரி[சை]?

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் அதிகாலை 5 மணி முதலே 50,100 ரூபா நோட்டுகளுடன் மக்கள் கியூவில் காணப்பட்டனர்.

கியூவரிசையில் பா... காலை

"தென்னிலங்கையில் பௌத்தம் போன்று

நம் மத்தியில் சைவம் தலை நிமிர வேண்டும்"

— யாழ். உதவி அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், செவ்.

சைவமக்களாகிய நாங்கள் சைவ மாநாடுகள் வைப்பதோடு நின்றுவிடக்கூடாது. சைவ மக்கள் வாழ்க்கை நடத்தத்தக்கதாக பழக்க வழக்கங்களை உண்டுபடுத்த வேண்டும். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் நாவலர் பெருமான் பரசமய உக்கிரத்தை அடக்கினார். ஆனால் நாவலர்பெருமான் மறைந்த பின் அவர் ஆரம்பித்த சமயத்தொண்டைத் தொடர்ந்து வீரத்தோடும், அபிமானத்தோடும் செய்ய பலர் முன்வரவில்லை. ஆனதினாலே சைவம் காப்பாற்றப்பட்ட போதிலும் சைவநெறி, சைவசீலம், சைவசிந்தனை மக்களின் மத்தியில் மிகப் பலம் குறைந்தநிலையில் தான் இருக்கின்றது'

கைதடி இந்து வாலிபர் சங்க ஏழாவது சைவமாநாட்டுக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை அனுப்பிவைத்துள்ள ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இம்மாதம் 4-ம் திகதி மாநாடு ஆரம்பமாகிறது. திரு முருகேசம்பிள்ளை தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

'நாவலர் பெருமானின் உருவச்சிலை தற்போது அவர் மறைந்து 90 ஆண்டுகளின் பின் அமைக்கப்பட்டதிலே ஒரு விசேஷ கருத்தை யான் காண்கின்றேன். அவர் இருந்த காலத்தில் அல்லது அவர் மறைந்த சில காலத்துக்குள் இச்சிலை அமைக்கப்பட்டிருந்தால் தற்போதைய தலைமுறையினர்கள் பலன் பெற்றிருக்கமாட்டார்கள். தற்போது அச்சிலை அமைக்கப்பட்டதால் நாட்டிலே பெருமகிழ்ச்சியும், சமய மறுமலர்ச்சியும் உண்டுபடக்கூடியதாயிருக்கின்றது இந்நிகழ்ச்சி நாம் சுதந்திரம் பெற்று 21 ஆண்டுகளின்பின்னும் கல்விக்கூடங்கள் யாவும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பின்னும் நிறைவேறியதிலும் ஒருவிசேஷ பொருத்தம் உண்டு.

நாம் தற்போது சீவிப்பது சரித்திர சம்பந்தமான சூழ்நிலையின் மத்தியில், இச்சூழ்நிலையில் மதம் முன்இடம் பெறவேண்டியதாயிருக்கிறது. தென்னிலங்கையில் பௌத்தம் எப்படித் தலை நிமிர்ந்து நிற்கிறதோ, அப்படியே எம்மத்தியிலும் சைவம் தலைநிமிர்ந்து நிற்பதே விரும்பத்தக்கது இதற்கு சைவமக்களாகிய நாம் சமய பக்தியோடும் சமூக உணர்ச்சியோடும் எமது வாழ்க்கையை நடத்தவேண்டும்.

'சித்தாந்தவித்தகர்' கயல்பாக்கம் திரு. சோமசுந்தர செட்டியார் இம்மாநாட்டையொட்டி அனுப்பிவைத்துள்ள செய்தியில் இளைஞர்கள் நல்லொழுக்கத்தில் ஈடுபடவேண்டும் தெய்வ நம்பிக்கையுடனும், சமய உணர்ச்சியுடனும் சாத்திரதோத்திர ஞானத்துடனும் திகழவேண்டும். இவர்களே நெறியல்லா, நெறியில் செல்லும் நம்போன்றவர்களுக்கு நல்வழிகாட்டவேண்டும் எனக் கூறியுள்ளார்.

'மனிதன் சந்திரனையே வெற்றிகொண்ட வேளையிது முன்னெப்போதுமில்லா அளவிற்குத்தெய்வபக்தியும் முன்னேறவேண்டிய வேளையிது இச்சந்தர்ப்பத்தில் இந்து வாலிபர் மாநாடு எடுப்பது சாலச்சிறந்ததே' என முன்னாள் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம் ஸ்ரீகாந்தா அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, சென்னை தீபம் ஆசிரியர் திரு நா பார்த்தசாரதி, முன்னாள் பட்டிருப்பு எம் பி திரு எஸ் எம் இராசமாணிக்கம், சாவகச்சேரி எம் பி திரு வ ந நவரத்தினம், கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை, ஊர்காவற்றுறை எம் பி திரு கா பொ இரத்தினம், ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா முத்தையா, மதுரை திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபை தவத்திரு குன்றக்குடி அடிகள் ஆகியோரும் மாநாட்டை வாழ்த்திச் செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

4-ம்திகதியிலிருந்து மூன்று தினங்கள் நடைபெறும் இம்மாநாட்டில் சைவ சமய தீட்சை அளிக்கப்படும்.

மானிப்பாய் போன்ற கிராமங்களில் இருந்து பெருந்தொகையான மக்கள் சேமிப்புப் பத்திரத்தில் பணம் போடுவதற்கு கொக்குவில் தபால் நிலையத்துக்கு வந்திருந்தனர்.

சனிக்கிழமையன்று சேமிப்புப் பத்திரங்களில் ஒட்டுவதற்கான முத்திரைகள் முடிவடைந்தபடியால் ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பவேண்டியிருந்தது.

கிளிநொச்சியில்

கிளிநொச்சி, சனி

'நாவலர் கண்ட கனவு நனவாகிறது'

உடும்பராய், திங்கள்

"ஊர்களில் உள்ள சிவாலயங்கள் தோறும் புராணங்களைப் படிக்கவேண்டும். கந்தபுராணம் போன்ற தெய்வாம்சம் பொருந்திய புராணங்களைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் சகல செல்வங்களையும் பெறுவார்கள் என்று அன்றே நாவலர்பெருமகன் கூறினார். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் புராணபடனம் நடைபெற உதவியாயிருந்தவர் நாவலர் பெருமான். பிரசித்தி பெற்ற நல்லூரிலே நாவலர் மணிமண்டபத்திலே கந்தபுராண படனம் ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானது. நாவலர்பெருமான் ... வித்தியாலய ஆசிரியர் சேந்தன் சி. கார்த்திகேசு உட்படப் பலர் புராண படனத்தில் கலந்துகொண்டனர்.

உத்தியோகத்தர் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சித்தன்கேணி கலைநகர் சனசமூக நிலையத் தலைவர் சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினமும் உபதலைவர் திரு மு. புஷ்பராசாவும் தமது தலைவர் பதவிகளை இராஜினாமாச் செய்ததன் காரணமாக புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவதற்காக நடைபெற்ற பொதுக்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

செல்லப்பெண்

இன்றைய ...லன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
(யாழ்ப்பாணம்) சோ—மனோரமா
தினசரி 4 காட்சிகள் நடித்த
செல்லப்பெண்

ராணி எம்.ஜி.ஆர்—லட்சுமி
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா — அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
மாட்டுக்கார வேலன்

வின்ஸர் ஜெமினி கணேசன்-காஞ்சனா
(யாழ்ப்பாணம்) நாகேஷ்-மஞ்சுளா
தினசரி 4 காட்சிகள் நடித்த
சாந்தி நிலையம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2.30, 6-30, 10-00
போயா நாட்கள் 10.30 மெற்னி
கெப்பிட்டல் பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்

சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்த மனிதன்
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

கையில் ஆசிரியசங்கங்களின் ஒற்றுமைக்குரலே ஆசிரியர் குறைகளைப் போக்கவல்லது எனக் குறிப்பிட்டார்.

அகில இலங்கைத் தமிழாசிரியசங்கப் பொதுக் காரியதரிசி திரு. க. இ குமாரசாமி சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பது ஆசிரியர்களுக்கு மிகவும் வேண்டியது எனக் கூறியதுடன் இடமாற்றம் கட்டாயஓய்வு என்பவற்றில் ஆசிரியர் பாதிக்கப் படுகின்றனர் என்றும் கூறினார்.

பின்வருவோர்புதியவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரியப்பட்டனர்: திரு. சா. குணநாயகம் தலைவராகவும் திரு. இ. ஆறுமுகம் காரியதரிசியாகவும் திரு. த. நடராசா தனாதிகாரியாகவும் திருவாளர்கள் அ நா. பென்னேயா ச. சிதம்பரப் பிள்ளை உபதலைவர்களாகவும் திருவாளர்கள் செ. சீனிவாசகம் க. தம்பையா, சு. நல்லதம்பி இ. அப்பாத்துரை நா. சிவகுரு ச. விசுவநாதம் நிருவாகசபை உறுப்பினர்களாகவும் திருவாளர்கள் மு. சிவஞானப்பிரகாசம் மு. குமாரவேலு எண்பார் வையாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பீபோயா 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-00, 6-00, 9-30
எம். ஜி. ஆர் பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 4 காட்சி
ஜெய்சங்கர்- கே. ஆர் விஜயா
நடித்த
பெண்ணே
வாழ விடுங்கள்

REGAL
Jaffna
Daily 4Shows
Clint Eastwood
Richard Burton
in
WHERE EAGLES
DARE

ஐப்பசி மாதம் 17-ந் திகதி
(3-11-70)

மேஷம்- பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடம் உண்டு. பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும்.

ரிஷிபம்- தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

மிதுனம்- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு.

கடகம்- நண்பர்களே உங்கள் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாக அமைவார்கள். மொட்டைக் கடிதம் ஒன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும்.

சிம்மம்- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்.

கன்னி- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

துலாம்- முயற்சியின்மூலம் முதலிடத்தைப் பிடித்துக் கொள்ளுவீர்கள். பலவழிகளிலும் பணம்வந்துசேரும்.

விருட்சிகம்- பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டாகத்தான் இருக்கும். சகதொழிலாளர்களுடன் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு- இன்னலின் பின்னால் வேதனைப்படுவீர்கள். நீண்டகாலத் தொடர்பு ஒன்று இன்று துண்டிக்கப் படலாம். சுமாரானதினம்.

மகரம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலைதென்படும். இன்று பொன்னாள்.

கும்பம்- சித்தனைக் கணேகள் தாக்கும். சிறிவரும் கோபம் வேதனையைத்தரும். உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலையைத் தரும்.

மீனம்- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும்: வாகனத்துடன் வாழ்க்கை நலனும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இன்றைய பலன்

கிளிநொச்சி, சனி

இங்குள்ளமக்கள் வங்கிக் கிளையில் புதிய வைப்புக் கணக்குகள் மூலம் சுமார் இரண்டு இலட்சம் ரூபா சேர்த்துள்ளது. ஏறக்குறைய நாலு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா நோட்டுக்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வெளியிடங்களில் இருந்து அநேகர் இங்குவந்து பழைய பண நோட்டுகளை மாற்றினர். கிளிநொச்சி பொலிசாரின் ஒத்துழைப்புடன் வங்கிக்கிளை அதிகாரிகள் மிகவும் கண்ணியமான முறையில் விரைவாகப் பணநோட்டுக்களை மாற்றிக்கொடுத்தனர்.

இவர்களையும் பாதித்தது

தாவடி, திங்கள்

ரூபா நோட்டுப் பிரச்சினையினால் தாவடிப் பகுதியிலுள்ள சுருட்டுத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் அநேக சுருட்டுத் தொழிலாளர்களுக்கு, சம்பளம் வழங்கப்படவில்லையெனத் தெரிகிறது. இதனால் மேற்படி தொழிலாளர்கள் கஷ்டப்படுவதாகவும் அறியப்படுகிறது.

இப்படியும் நடந்தது

அம்பன், திங்கள்

பருத்தித்துறை இலங்கை வங்கியின் முன்னால் நேற்று முன்தினம் அறுபது வயதைக் கடந்த மூதாட்டியொருவர் பழைய நோட்டுக்களை மாற்றிக்கொள்வதற்காக பெண்கள் வரிசையில் கூப்பன் புத்தகத்துடன் நின்றார். வெய்யிலின் கொடுமைதாங்காது மூதாட்டி மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தார். இதை அவதானித்த பொலிஸார் மூதாட்டியைத் தூக்கிச் சென்று அவரது பணத்தை மாற்றிக்கொடுத்தது டன் அவரை ஆஸ்பத்திரியிலும் சேர்த்துவிட்டனராம்.

பணத்தை இழந்து திரும்பினர்

மூலை, திங்கள்

வேலணை, திங்கள் வேலணையிலிருந்து பலர் பணம் மாற்றுவதற்காக அதிகாலையிலேயே யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். இவர்களில் இருவர் தங்கள் பணத்தை இழந்து திரும்பினர். ஜேப்படிகாரரின் கைவரிசைக்கு இவர்கள் இலக்காகியதாகத் தெரிகிறது.

கல்லூரிமாணவர்களும் தவம்கிடந்தனர்

மாவிட்டபுரம், திங்கள்

100,50 ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்காக ஆண்களும் பெண்களும் சுமார் 1000 பேர் வரையில் காங்கேசன்துறை மக்கள் வங்கி முன் காத்துக்கிடந்தும் சில சமயம் பணம் பெறமுடியாமல் ஏமாந்து போவதாகத் தெரிவித்தனர்.

கியூவரிசையில் பெரும்பாலும் கல்லூரி மாணவ, மாணவிகளே காண முடிந்தது. குழந்தைகளைக் கையில் ஏந்தியபடியும் பெண்கள் கியூவில் நின்றனர். இவர்களைக் கடற்படையினர் முன் கொண்டு சென்று பணம் மாற்ற உதவினர்.

இவர்களுக்கு ஏமாற்றம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவிலிருந்து தங்களுடைய பழைய 100, 50 ரூபா நோட்டுகளை மாற்றுவதற்காக யாழ்ப்பாணம் சென்றவர்கள் நெடுந்தீவில் நடமாடும் வங்கி பழைய நோட்டுகளை மாற்றிக் கொடுப்பதாகக் கேள்விப்பட்டதும் இங்கு வந்துசேர்ந்தார்கள். ஆனால் அதற்கிடையில் வங்கி அதிகாரிகள் புறப்பட்டுவிட்டார்கள். இதனால் அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கொக்குவிலில்

தாவடி, திங்கள்

கொக்குவில், தாவடி, கோண்டாவில், சுதுமலை, உதவியாயிருந்தவர் நாவலர் பெருமான். பிரசித்தி பெற்ற நல்லூரிலே நாவலர் மணிமண்டபத்திலே கந்தபுராண படனம் ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானது. நாவலர்பெருமான் கண்ட கனவு இப்பொழுது ஓரளவுக்கு நிறைவேறிவருகிறது.''

கந்தசஷ்டியை முன்னிட்டு நல்லூர நாவலர் மணிமண்டபத்தில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமான கந்தபுராண படனத்தில் தொடக்கவுரை நிகழ்த்திய வைத்தீஸ்வரவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுரும்பராய் இந்துக் கல்லூரியின் கனிஷ்ட அதிபர் பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் 'திகடசகரச் செம்முக மைந்துளான்...'' என்று தொடங்கும் பாடல் முதலாகவுள்ள கலப்புப் பாடல்கள் மூன்றையும் ஒதி புராண படனத்தை ஆரம்பித்துப் பயனும் உரைத்தார்.

ஆசிரியர் திரு. வி. செல்வத்துரை நாவலர் மகா உபதலைவர் திரு. மு. புஷ்பராசாவும் தமது தலைவர் பதவிகளை இராஜினாமாச் செய்ததன் காரணமாக புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவதற்காக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்:

தலைவர்: செல்வன் க. ஸ்ரீபஞ்சநாதன். உபதலைவர்: திரு இ. புலந்திரதேவன், செயலாளர்: செல்வன் ந. சேகரம்பிள்ளை, உப செயலாளர்: செல்வன் கு. சிவானந்தன், பொருளாளர்: செல்வன் வி. மயில்வாகனம், பரிசோதகர்: செல்வன் ஐ. கணேஸ்வரநாதன் நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

.....

ஆர்வம்

முசலி, திங்கள்

மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளுக்கும் பல நோக்குச் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும், மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் ஒரு தேசிய சேமிப்பு ஆர்வத்தை உண்டாக்குவதற்காக ஆக்கவேலையை வவுனியா, மன்னார் தேசிய சேமிப்பு மேற்பார்வையாளர் திரு. ஆர். சற்குணராசா மேற்கொண்டுள்ளார்.

இவர் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நாட்டைக் காக்கும் பணியில் மக்களை தேர்ச்சிப்படுத்தி சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்குவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளார்.

மகஜர்

யாழ்ப்பாணம் செவ். 'பஸ்கள் சீராகஓடும்வரை புகையிரதஇலாகா மேலதிகப்புகையிரதங்களை சேவையிலீடுபடுத்தவேண்டும். இவ்வாறு கோரும் மகஜரை தென் யாழ். பிரயாணிகள் சங்கக்காரியதரிசி நேரில் புகையிரத பகுதியாரிடம் கொடுத்தார்.

(கு. வி. ம.)

சஞ்சிகைகள்

ஆங்கிலத்தில் வெளியாகும் சில சஞ்சிகைகள் (Magazines) பெற விரும்புவோர் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளுங்கள் 31-1-71ன் முன் சேருபவர்கள் கவர்ச்சிகரமான சினக் கலண்டர் ஒன்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
யாழ். புத்தக நிலையம்,
91, ஸ்ராண்லி வீதி,
2537 யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள
தங்க - வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னுதிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கராச்சியில் வந்திறங்கியதும் போலந்து உதவி அமைச்சர் விபத்தில் பலி

கைகுலுக்குகையில்வான்மோதியது; சதியாக இருக்கலாம் என சந்தேகம்

கராச்சி, நவம்பர் 2

கராச்சி விமான நிலையத்தில் நடந்த விபத்தொன்றில் போலந்து வெளியுறவு துணை அமைச்சர் திரு. போல்நாய்க் கொல்லப்பட்டார். போலந்து அதிபர் திரு. விதாக்கியும் அவரது மனைவியும் தெய்வாதீனமாகத் தப்பினர். மேலும் மூன்று பாகிஸ்தானியரும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானிலுள்ள கராச்சி விமான நிலையத்தில் வெளியுறவு துணை அமைச்சர் திரு. போல்நாய்க்கும் பாகிஸ்தானுக்கு ஐந்துநாள் விஜயம் மேற்கொண்டுள்ள சரித்திரு. போல்நாய்க்கும் பொழுதும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும். அவராத உழைப்பும் தியாக மூமே இன்று நாட்டுக்குத் தேவை. நேருவின் கொள்கை வழியில் நம் நாம்நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றார்.

இந்த ஆனந்தபவன் கையளித்த உறுப்பத்திரத்தில் திருமதி இந்திரா காந்தியும் அவரது இருபுதல்வர்களும் உயரி நீதிமன்றநீதிபதி ஒருவரும் கைச்சாத்திட்டனர்.

கராச்சி விமான நிலையத்தில் வந்திறங்கினர். அவர்களை பாகிஸ்தான் உயர்தர அதிகாரிகளுக்கு அறிமுகம் செய்து கொண்டிருக்கும் பொழுது பாகிஸ்தான் உளவு வான் ஒன்று விரைந்து வந்து அந்த இடத்தில் புகுந்து ஆட்களை மோதியது இம்மோதலினல் போலந்து அதிபர் விதாக்கியும் அவரது மனைவியும் தூக்கி எறியப்பட்டார்கள். மூவர் வான்சக்கரத்துக்குள் நெரிபுண்டார்கள். வான் மேலும் சென்று விமான அலுவலகத்திலுள்ள வேலியுடன் மோதி நின்றது.

இவ்விபத்தில் போலந்து வெளியுறவு துணை அமைச்சர் ஸ்தலத்திலேயே மரணமானார். பாகிஸ்தான் உளவுச் சேவை உதவி இயக்குநர், பாகிஸ்தான அசோசியேற்றற் நியூஸ் பேப்பர் ஆசிரியர். படப்பிடிப்பாளர் ஆகியோரும் ஸ்தலத்திலேயே மரணமாயினர். இவ்விபத்தைக் கேள்விப்பட்டதும் பாகிஸ்தான் ஜனாதிபதி திரு. யாஹ்யாகான் தொலை பேசிமூலம் போலந்து அதிபருக்கு தன் வருத்தத்தைத் தெரிவித்தார்.

இவ்விபத்தினுல் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்ட போலந்து அதிபர் தனது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு வார்சோ திரும்பினர். இவர் தன்னுடன் வந்து ஸ்தலத்தில் மரணமான வெளியுறவு துணை அமைச்சர் திரு. போல்நாய்க்கின் உடலை விமானத்தில் ஏற்றி போலந்துக்கு அனுப்பி வைத்தார்.

நேரு நினைவுக் குழுவிடம்

ஆனந்தபவனை இந்திரா கையளித்தார்

புதுடில்லி, நவ. 2

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்நேரு நினைவு நிதிக்கு 'ஆனந்த பவனை' இன்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேரு நினைவுக் குழுவிடம் கையளித்தார்.

திருமதி இந்திரா காந்தி ஆனந்தபவனை நேரு நினைவுக் குழுவிடம் கையளித்து உரையாற்றுகையில் 'ஆனந்தபவன்' நேருவின் கொள்கைகளை மக்களுக்கு எப்

ஜேர்மன்

ஜனநாயக குடியரசில் புத்தகங்கள்

பேர்லின், நவ. 2

170 இலட்சம் ஜனத்தொகையுள்ள ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் 1969ல் வெளியிடப்பட்ட 5169 புத்தகங்களில் பதினென்றரைக்கோடி பிரதிகள் அச்சிடப்பட்டன.

மேலும் இந்த ஆண்டில் ஜேர்மன் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட 660 நூல்களில்130 இவசட்ம் பிரதிகள் அச்சிப்பட்டன. அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டவை விஞ்ஞான, தொழில் நுட்ப நூல்களே.

.....

"மாணவ எழுத்தாளரை உருவாக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்,

'எமது மாணவர்களை ஆக்குவித்து எழுத்தாளர்களாகவரச் செய்யவேண்டும் பிறநாட்டு நூல்களில் நன்மைதருவனவற்றை எடுத்துக் கொண்டு தீயனவற்றை விலக்க வேண்டும் இளைஞர்கள் தேசிய ஒற்றுமையை முன்வைத்து நூல்களைப் படைக்க முன்வரவேண்டும்' என தாளையடி மாரியம் மன்வாசிகசாலை அங்குரார்ப்பணக்கூட்டத்தில் தலைமைதாங்கிப் பேசிய சங்கீதபூஷணம்எஸ்விநாசித் தம்பி கூறினர். (கு.வி.ம.)

கூற்றாகும்

கோட்டை, நிங்கள் இலங்கை மத்திய வங்கி

நவீன பிரிட்டிஷ் போதனை வைத்தியசாலை

லண்டன், நவ. 2

வேல்ஸ் சர்வகலாசாலை 200 லட்சம் பவுண்கள் செலவில் ஐரோப்பாவிலேயே மிக நவீனமானதெனக் கருதப்படும் ஒரு போதனை வைத்தியசாலையை அமைத்துள்ளது. அடுத்தவருட முற்பகுதியில் திறக்கப்பட விருக்கும் இவ்வைத்தியசாலை பலவருடகால திட்டத்தின் பின் உருப்பெற்றுள்ளது.

இவ்வைத்திய சாலையில் நுழைந்தவுடன் மக்களோ எதிர்நோக்குவது ஒரு பெரிய திறந்தவெளிச்சாலையாகும் வங்கி தபாற்காரியாலயம், முடிஅலங்கார நிலையம் பிள்ளைகள் விளையாட்டுமைதானம், பல்வேறு கடைகள் போன்றவை இச்சாலையில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கடந்து சென்றால், 800 நோயாளிகளை உள்ளொடுக்கக்கூடிய 10 மாடிக்கட்டிடம் இருக்கிறது.

இங்கு ஒவ்வொன்றும் 32 படுக்கைகளைக் கொண்ட வார்ட்டுகள் இருக்கின்றன. ஒரு அறையில் எட்டுப் படுக்கைகளுக்கு மேலில்லை. ஒவ்வொரு படுக்கையுடனும் அவசரகால பிராணவாயு அளிப்புச் சாதனமும் வார்ட்டு குமாஸ்தாவுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இணைப்புச் சாதனமும் பொருத்தப்பட்டிருக்கின்றது.

தாதிகள் ஒவ்வொரு அறைக்குள்ளும் நுழையும் போது ஒரு பச்சைநிறப் பொத்தானை அமுத்திவிடவேண்டும் இப்படி அமுத்தியவுடன் வார்ட்டு குமாஸ்தாவிற்கு குறிப்பிட்ட தாதியின் சகல நடமாற்றத்தையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

நோயாளிகள் வார்ட்டுகளைக் கடந்து சென்றால் ஒன்பது அறுவைச் சிகிச்சை அறைகளைக்கொண்ட கூடத்தைக் காணலாம் அறுவைச் சிகிச்சை நடப்பதை நேரடியாக அவதானிக்கக் கூடிய வசதிகளும் இங்குண்டு.

இவ்வைத்திய சாலையிலுள்ள 3,500 ஆசிரிய மாணவ குழுவினரில் 800 பேர் அங்குள்ள வீடுதிகளிலேயே தங்கியிருக்கின்றனர் சிரேஷ்ட வைத்தியர்களும், வைத்திய, பல்வைத்திய மாணவர்களுக்கும், வைத்திய அதிகாரிகளுக்கு மெனத் தனித்தனியே விடுதிவசதிகள் இவ்வைத்தியசாலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்கிலுல் முண்டது வேள்வித் தீ!

புதுடில்லி, நவ. 2

யமுனை நதிக்கரையில் 21 வேத விற்பன்னர்கள் தீக்குச்சியின் உதவியின்றி, மந்திர ஜபத்தினுலேயே வேள்வித் தீயை மூட்டிய அதிசயம் இங்கு நிகழ்ந்ததென நம்பப்படுகிறது.

வேள்வியில் தீ கொழுத்துவிட் டெரிவதைக் கண்ட ஏராளமான ஆஸ்திகப் பெருமக்கள் 'கங்காமாயி கி ஜே'' (கங்கையன்னையே நீ வாழி) என்று கோஷமிட்டனர்.

அன்று காலை தொடர்ந்துகொண்டே இடைவிடாமல் மந்திரம் ஜபித்துக்கொண்டிருந்ததாக, யாக குண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்னக் குளம்

பெர்லின், நவம்பர் 2

தெகிவளை மிருகக்காட்சிச் சாலையில் அன்னங்களுக் கென தனியொரு குளம் அமைக்கப்படும் என்று மிருகக்காட்சிச்சாலையின் அதிபர் திரு. ஈ. அல்விஸ் பெர்லினில் தெரிவித்தார். அத்தகைய ஒரு குளம் பெர்லின் மிருகக்காட்சிச்சாலையி லும் உண்டு.

பெர்லினில் நடைபெற்ற மிருகக்காட்சிச்சாலை அதிபர்களின் 25-வது சர்வதேசிய காங்கிரஸில் திரு அல்விஸும் கலந்துகொண்டார். தான் பல புதிய கருத்துகளுடன் இலங்கை திரும்புவதாகவும், ஆசியாவில் எழில் மிகுந்ததும், மிகப்பெரியதுமான மிருகக்காட்சிச்சாலைகளிலொன்றுள இலங்கை மிருகக் காட்சிசாலையில் எல்லாப் பக்கங்களிலுமுள்ள மிருகங்களையும் ஒரே இடத்தில் நின்று ஒரே சமயத்தில் பார்க்கக்கூடியதாக புனரமைப்பு செய்யப்போவதாகவும் திரு. அல்விஸ் தெரிவித்தார்.

காங்கிரஸில் கலந்துகொண்ட 22 நாடுகளின் மிருகக்காட்சிச்சாலை அதிபர்கள் பின்னர் ஜெர்மன் ஜனநாயக குடியரசிலுள்ள மிருகக்காட்சிச்சாலைகளைப் பார்வையிட்டனர்.

தொழில் நுட்பக் கல்லூரி தரம் உயர்த்தப்படும்

உடுப்பிட்டி, திங்கள்

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி அடுத்த வருடம் முதல் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் நுட்பக் கல்லூரியில் வணிகத்துறையில் பயிலும் மாணவர்கள் நேரடியாக ஜீ. ஏ. கியூ பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

சிரமதானிகள்மீது புகார்

வல்வெட்டித்துறை, திங்

தொண்டமனற்றை அடுத்துள்ள கெருடாவில் கிராமத்தில் கடந்த வாரம் வீதி திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த சிரமதான இயக்கத்தினர் வீதி ஓரத்தில் இருக்கும் சில காணிச் சொந்தக்காரர்களின் அனுமதியின்றி அவர்களின்வேலிகளையும் மதில்களையும் சேதப்படுத்தியதாக அரசாங்க அதிபருக்கும் பொலிஸ் சுப்பிரிண்டனுக்கும் புகார் செய்யப்பட்டதையடுத்து விசாரணை நடைபெற்று வருகிறது.

நெடுந்தீவில் ரூ. 57,350 நோட்டுகள் மாற்றப்பட்டன!

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில்உள்ள மக்கள் தங்களுடைய 100, 50 ரூபா நோட்டுகளை மாற்றமுடியாது கஷ்டப்பட்டமையால் நெடுந்தீவு காரியாதிகாரி திரு. செபநாயகம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாக மக்கள் வங்கி அதிகாரிகள் இங்கு கடற்படையினரின் மோட்டார் படகுகளில் வந்து சேர்ந்து ரூபா 57,350 பெறுமதியான பழைய 100, 50 ரூபா நோட்டுகளை புதிய நோட்டுகளாக மாற்றினர்கள். மிகுதி ரூபா 3,200 பெறுமதியான பழைய நோட்டுகள் வங்கியில் சேர்க்கப்பட்டன.

நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் வைத்து பழைய நோட்டுகளை மாற்றிக் கொடுத்த மக்கள் வங்கியினருடன் கச்சேரியில் இருந்தும் மூன்று அதிகாரிகள் வந்திருந்தனர் இவர்கள் யாவருக்கும் ஏற்ற ஒழுங்குகளை காரியாதிகாரி செய்துகொடுத்தார். காலை 10 மணிக்கு ஆரம்பமான பரிமாறல் மாலை 4 மணிவரை நடைபெற்றது. மக்கள் மிகவும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் நோட்டுகளை மாற்றிக் கொண்டார்கள் பல வயது போலவர்களையும் காணக்கூடியதாய் இருந்தது. யாழ்ப்பாணம் சென்று மாற்றமுடியாது இங்கு ஏற்கனவே திரும்பிய வர்களும் சந்தோஷத்தோடு மாற்றிச் சென்றார்கள்.

ஹெல் சிங்கிப்

பேச்சு வார்த்தையால் பயனில்லை

சீனாவின் கருத்து

பெல்சிங்கி, நவ. 2 பேச்சு வார்த்தையின்

பயனில்லை

சீனாவின் கருத்து

கெல்சிங்கி, நவ.2

போர்ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதுபற்றி சோவியத்யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதுக்குழுக்களின் தலைவர்கள் பின்லாந்தின் தலைநகரான கெல்சிங்கியில் பேச்சு வார்த்தை நடத்தினர், அணு ஆயுத போர்க்கருவிகளைக் கட்டுப்படுத்துவதுபற்றிஇவ்விரு தூதுக்குழுத்தலைவர்களும் பேச்சுவார்த்தைநடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதே நேரத்தில் எல்லா நாடுகளும், சிறியநாடுகளும் உட்பட ஒன்றுகூடி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென சீனா தெரிவித்துள்ளது

சீனா யப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்பொழுதே இக்கருத்து தெரிவிக்கப்பட்டதாக பீக்கிங் வானொலி தெரிவித்தது. அதுமேலும் தெரிவித்துள்ளதாவது: வல்லரசுகள் கூடி முடிவு செய்து விடுவதினால் அணுஆயுத போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதை நிறுத்திவிட முடியாது. எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்தே இதுபற்றி முடிவு செய்ய வேண்டும்

இவ்வித ஆலோசனையை சீனா கூறுவது இது இரண்டாவது தடவையாகும். சீனா இப்பொழுது அணுவல்லரசாகமாறிவருகிறது அண்மையில் தான் சீனாதனது 3வது அணுப்பரிசோதனையை நடத்தியது குறிப்பிடத்தக்கது

நேதாஜி விபத்தில் இறக்கவில்லை

நாசிக், நவ. 2

நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் யாருக்கும் தெரியாமல் ஓர் இடத்தில் இறங்குவதற்காக தனது இந்திய நண்பர்கள் சிலருடன், ஜப்பானிய துணியில் தைக்கப்பட்ட உடையை அணிந்துகொண்டு, தைப்பே விமான நிலயத்திலிருந்து 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 18ம் திகதி புறப்பட்டார். விமான விபத்தின் பின் அவர் எரியுண்ட நிலையில் கொண்டுவரப்பட்டார்.

இவ்வாறு அந்தநேரத்தில் நேதாஜியின் மெய்க்காப்பாளராகத்தான் இருந்ததாகச் சொல்லிக் கொள்ளும் திரு. முகமத் உஸ்மான் பட்டேல் கூறினார்.

நேதாஜியின் அந்நேரத்தைய நடைமுறைகள் பற்றி விபரமான அறிக்கைஒன்றை பிரதம இந்திராகாந்திக்குத்தான் அனுப்பிவைக்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

1943 அக்டோபர் தொடக்கம் தான் அவரது மெய்க்காப்பாளனாக இருந்ததாகவும், யுத்தத்தில் ஜப்பான் சரணாகதி அடைந்ததும் கேர்ணல் ஹபியுல் ரகுமானை ரங்கூனிலுள்ள இந்திய தேசிய இராணுவத்தலைமை நிலையத்திற்கு அனுப்பினார். இவரை அங்கு அனுப்புவதற்கு முன்பாக இருவரும் ஆகஸ்ட் 17ந் திகதி இரவு பேசிக் கொண்டிருந்தனர்.

தைப்பே விமான நிலையத்தில் நேதாஜியை வரவேற்பதற்கு, காங்கிரஸ் தலைவர் ராஸ்பிஹாரிபோஸ், அவரது மனைவி, இரு குழந்தைகள். இரு ஜப்பானிய ராணுவத்தினர் ஒரு டாக்டர் ஆகியோர் வந்திருந்னர் நேதாஜி அந்த ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுடன் பேசினார்

அதன்பின் விமானத்தில் பெற்றோல் தெளிக்கப்பட்டு தீயிடப்பட்டு, அந்த விமானத்தை ஜப்பானிய விமான ஓட்டி 50 அடி உயரத்திற்கு மேலெழுப்பி தரையில் மோதினார். விமானி விமானத்திலிருந்து வெளியே பாய்ந்தார், கேர்ணல் ஹபிப் விமானத்துக்குள் சென்று சிலமுக்கிய பொருட்களை அப்புறப்படுத்தும் பொழுது காயங்களுக்குள்ளானார்.

இதே நேரத்தில் நேதாஜி தனது இராணுவ உடையை மாற்றிஜப்பானிய உடையை அணிந்துகொண்டார். அதன் பின் தானும் நேதாஜியும், தனது குடும்பத்தினரும் இந்தியாவின் பக்கம்பார்த்த படிதொழுதார்கள் என்றும், பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் கேர்ணல்ஹபிபீபாகிஸ்தானுக்குச் சென்றதாகவும் திரு பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியைத் தனது குழந்தைகள் தெரிவிப்பார்கள் எனவும் அவர் கூறினார்.

நாள் விஜயத்தை மேற்கொண்ட போலந்து அதிபர் தனது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு வார்சோ திரும்பினார், இவர் தன்னுடன் வந்து ஸ்தலத்தில் மரணமான வெளியுறவு துணை அமைச்சரின் உடலையும் கொண்டு சென்றார்,

இவர்களுடன் பாகிஸ்தான் தொழில் அமைச்சரைக் கூடச்செல்லுமாறு பணிக்கப்பட்டதாகவும், ஆனால் அவர் அவ்விமானத்தில் செல்லவில்லை என்றும் ஏஜன்சிஸ் செய்திகள் தெரிவித்தன, ஆனால் விமானத்தில் இடம் இல்லாததினாலேயே தான் விமானத்தில் பிரயாணம் செய்ய முடியாமற்போய்விட்டதாக போலந்து அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்துள்ளார்,

இந்த வானின் பிரேக் உரியநேரத்தில் செயற்படாததினால்தான் இவ்விபத்து நேர்ந்ததாக பாகிஸதான் பொலிசார் தெரிவித்தனர். ஆனால் இந்த வானை ஒட்டிய சாரதி கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சுலோகங்களைக் கோஜித்ததாக அங்கிருந்து கிடைத்த ஏஜன்சிச் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இவ்விபத்தில்காயமடைந்த ஐவர் ஆபத்தான நிலையில் உள்ளனர். இவ்விபத்தில் சில குழந்தைகளும் காயமடைந்தனர். இவ்விபத்து சம்பந்தமாக வான் சாரதி கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து சம்பந்தமாக விரிவான விசாரணை நடத்துமாறு பாகிஸ்தான் அரசாங்கம் பொலிசாருக்குஉத்தரவிட்டுள்ளது

......

நிக்ஸனைக் கொல்லச் சதியாம்

சிக்காகோ. நவ. 2

சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனைக் கொலலச்சதி செய்யப்பட்டதாகவும் இதுகுறித்து விசாரித்து இருவருக்கு பொலிசார் வாரண்டு பிறப்பித்திருப்பதாகவும் இலினாயிஸ் ராஜ்ய பொலிஸ் தெரிவித்துள்ளது. இலினாயிஸ் ராஜ்யத் தேர்தலில் குடியரசுக் கட்சி அபேட்சகர்களுக்காகப் பிரசாரம் செய்ய நிக்ஸன் இங்கு வந்திருந்தார்.

மேற் கூறப்பட்ட இரு நபர்களும் நிக்ஸனைக் கொல்லும் எண்ணத்துடன் ஒரு காரில் அதில் வந்ததாகவும் அவர்களில் ஒருவனிடம் தானாகவியங்கும் துப்பாக்கி இருந்ததாகவும் தகவல் கிடைத்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சங்கீதபூஷணம் எஸ்விநாகிதத் தம்பி கூறினார் (கு.வி.ம,)

சுற்றுலா

கோட்டை, திங்கள்

இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றத்தினர் கடந்த 28-ம் திகதி திருக்கோணமலைக்குச் சுற்றுலா மேற்கொண்டனர்.

......

பாராட்டிக் கௌரவித்தனர்

யாழ்ப்பாணம், செவ்

வலிகாமம் மேற்கு தமிழாசிரியர் சங்கம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. க. நல்லதம்பிக்கு பாராட்டு விழா ஒன்றினை நடத்திக் கௌரவித்தது

தலைவர் திரு சா. குணநாயகம் தமது தலைமையுரையில் 'காரை நகரில் மட்டுமல்ல வலிகாமம்மேற்குப்பகுதியிலும் சிறந்தவோர் தலைமை ஆசிரியர் எனப் பாராட்டப்படுகிறவர் திரு. நல்லதம்பி என்றார்.

பலரும் தமது பாராட்டுரையில் தலைமை ஆசிரியர் க. நல்லதம்பி ஆசிரியர் சேவையில் மட்டுமன்றி. கூட்டுறவுச்சங்கங்கள், சகாயநிதிச்சங்கங்கள் போன்ற பல்வேறு வகையில் அருந்தொண்டாற்றியவரென்றும், வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்கத்திலும், அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்திலும் உபதலைவராகவும். தலைவராகவும் அரியசேவை செய்து சங்கங்களின் வளர்ச்சியில் கருத்துடையவராயிருந்தாரெனவும் கூறினர்.

தலைமை ஆசிரியர் தமது பதிலுரையில், 39 வருட ஆசிரிய சேவையில், காலத்துக்குக்காலம் ஆசிரியர் மத்தியில் உண்டாகும் இன்னல்களை இயன்றளவு நீக்கவும், ஆசிரியர் நலனில் கருத்துடையவனாய் இருக்கவும் நேர்ந்தது உங்களுடைய ஒத்துழைப்பினாலேதான். இன்றுநீங்கள் கூறியபாராட்டுரைகள் யாவும் உங்களுக்குரியவைகளே என்று கூறுவதில் பெருமையடைகின்றேன். எனக்களித்தபாராட்டுபசாரணைகள் யாவற்றிற்கும் எனது மனப்பூர்வமான நன்றி. வலிகாமம் மேற்குத் தமிழாசிரிய சங்கம் பழமையும் பெருமையும் கொண்டது. இதனைப் பலங்கொள்ளச் செய்து வளர்ப்பது உங்கள் கடமை. சங்கம் மென்மேலும்வளரவேண்டும்' என்றார்.

...தென நம்பப்படுகிறது.

வேள்வியில் தீ கொழுந்துவிட்டெரிவதைக் கண்ட ஏராளமான ஆஸ்திகப் பெருமக்கள் 'கங்கா மாயீ கிஜே'' (கங்கையன்னையே நீ வாழி) என்று கோஷித்தனர்.

அன்று காலை ...ற்கொண்டே இடைவிடாமல் மந்திரம் ஜபித்துக்கொண்டிருந்ததால், யாக குண்டத்தில் தீ மூண்டெழுந்தது என்று சொல்கிறார்கள். யமுனைச்சங்கம் யமுனைக்கரையில் நிகம்போத் கட்டிடத்தில் யமுனாதேவியைப் பிரதிஷ்டை செய்வதற்கான யாகசாலை இது. அக்கினி கும்பத்தில், வன்னி மரத்தில் ஜபம் செய்துகொண்டே தீ கடைந்தனர். கும்பத்திலிருந்து தீப்பொறிகள் கிளம்பின. வன்னி மரம் வேள்வித் தீயாக மாறியது.

கணிதத்தை வெறுத்தவர் கணித இயந்திரத்தை கண்டுபிடித்தார்

லண்டன், நவ.2

பிரபலம்பெற்ற ஆங்கில கணித மேதையான சாள்ஸ் பகேஷ் காலமாகி கிட்டத்தட்ட 100 வருடங்கள் ஆகின்றன. இன்றைய அற்புதமான மின் கணித இயந்திரங்களாகக் கருதப்படும் 'கம்யூட்டர்களின்' மூல பிதா இவராவார்.

சாள்ஸ் பகேஷ் சிறுபராயத்திலிருந்தே கணிதத்தை வெறுத்தவர், 'மூளையை உடைத்து' கணக்கிடும் வேலையை 'மனித அறிவின் கீழ்த்தரமான தொழில்' என்று அவர் வர்ணித்திருக்கிறார். மனிதன் கணக்கிடுவதில் தனது அறிவு சக்தியை வீண் விரயமாக்கக்கூடாது என விரும்பிய அவர் கணக்கிடும் இயந்திரம் ஒன்றை உருவாக்க வேண்டுமென நீண்டகாலமாக அரும்பாடு பட்டார்.

1821-ம் ஆண்டில் இரு வகையான கணக்கிடும் இயந்திரங்களைச் சிருஷ்டிக்கும் ஆராய்ச்சியில் இறங்கினார். 20 வருடகால ஆராய்ச்சியின் பின்னர்தான் இவ்வியந்திரங்களின் அமைப்பையும் அதன் செயலாக்கத்தையும் அவர் வரைப்படத்தில் ஆக்க முடிந்தது.

இவ்வியந்திரங்களில்ஒன்று கணக்காய்வு இயந்திரம் எனப்படுவது. இன்றைய மின்னியக்க கம்யூட்டரின் தொழில் நுணுக்கத்தை ஒத்த அதிசயமான இயந்திரம் இது. எண்கணித தகவல்கள் அடங்கிய 'இயந்திர மூளை' ஒன்றுமட்டும் இருந்திருந்தால் அவர் ஆக்கிய இயந்திரம் எந்தவகையான சிக்கலான கணக்குகளையும் நுட்பமாக நொடிப்பொழுதில் செய்துவிடும். துவாரமிடப்பட்ட நாடாவைப் பயன்படுத்தும் 'கணித நிகழ்ச்சி' என்று அவர் கண்டுபிடித்த முறை இன்று அதாவது 100 ஆண்டுகளுக்குப் பின்பு மின்கணித இயந்திரங்களில் பாவிக்கப்படுகிறது

நவீன மின்கணிதங்கள் இயங்கும் மூலக்கோட்பாடுகளை அவர் அன்றே அறிந்திருந்தார். ஆனால் அக்காலப் பொறியியல் துறை பின்தங்கிய நிலையிலிருந்ததால் தாம் எண்ணியவாறு நுட்பமான கணித இயந்திரத்தை அவரால் உருவாக்க முடியவில்லை மின்னியக்கம் பற்றி அன்று அவர் அறிந்திருந்தால் ஒரு நூற்றுண்டு காலத்திற்கு முன்னரே இங்கிலாந்தில் மின்னியக்க கணித இயந்திரங்கள் தோன்றியிருக்கும் என்பது திண்ணம். அக்காலத்தில் நீராவி சக்திதான் இயந்திர - இயக்கத்திற்கு அடிப்படையாக இருந்தது. அவர் நீராவிய சக்தியைப் பயன்படுத்தியிருந்தால் அவரது 'கணக்காய்வு இயந்திரம்' நிமிடத்திறகு 60 கூட்டல் கணக்குகளை மட்டும் செய்திருக்கும், ஆனால் இன்றைய மின்னியக்க கணித இயந்திரங்களோ இதனைவிட நூறு மடங்கு வேகமாக இயங்கவல்லன.

......

கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

''அரிசி விநியோக காவலாளர்கள்போயாவிடுமுறை நாட்களிலும் கடமையாற்றுகின்றார்கள் கடமை செய்யும் மேலதிக நாளுக்குப் பதிலாக விடுமுறை அல்லது மேலதிக சம்பளம் தரப்படவேண்டும் மாரிகாலத்தில் கடமை புரியும் காவலாளர்களுக்கும் ஆனையிறவுத் தடை முகாம் ஊழியருக்கும் மழைப்பாதுகாப்புச்சட்டை மின் விளக்கு ஆகியவை தந்துஉதவவேண்டும்'' எனக் கோரும் மகஜரை அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை இணைச்செயலாளர் திரு, எஸ். ஆறுமுகம் யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளார் வேறு பல தேவைகள் பற்றியும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது' (கு.வி.ம)

...பெறுமதியான ... நோட்டுகள் வங்கியில் சேர்க்கப்பட்டன.

நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் வைத்து பழைய ... இங்கு ஏற்கனவே திரும்பியவர்களும் சந்தோஷத்தோடு மாற்றிச் சென்றார்கள்.

முல்லைத்தீவு பஸ் கொண்டக்டர் கொலை வழக்கு

சாட்சி மீது மீண்டும் பிடி விருந்து

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவுப் பகுதியைப் பரபரப்புக்குள்ளாக்கிய பஸ் கொண்டக்டர் துரைராசா கொலை வழக்கு மீண்டும் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு மேவில் விஜயசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழமையிலும் பார்க்க பெருந்தொகையான மக்கள் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் காணப்பட்டனர்.

இவ் வழக்கில் இவ்வருடம் ஆனிமாதம் 8-ம் திகதி இரவு முல்லைத்தீவு குமுளமுனை இ. போ. ச. பஸ்ஸில் கடமைசெய்த கொண்டக்டர் துரைராசாவைக்கொலை செய்ததாகக் குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகராசா, வேலுப்பிள்ளை இரத்தின சிங்கம் ஆகியோர்மீது முல்லைத்தீவுப் பொலிசார் குற்றம் சாட்டியுள்ளனர்.

எதிரிகள் சார்பில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. அட்வகேட் திரு அரசுவோல்டரின் உதவியுடனும் புரக்டர் திரு. சிவசிறீதரனின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

வழக்கை வவனியாப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு டயஸ் நடத்தினார்.

நேற்று பொலிஸ் தரப்பில் முக்கிய சாட்சியான ஆறுமுகம் செல்லையா வரவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. இவர் 15-10-70-ல் நீதிமன்றக் கட்டளையை வாங்கிக்கொண்டு வரவில்லையாம். இவர்மீது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தும் இவரைக் கண்டுகொள்ள முடியவில்லையெனப் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

எதிரிகளின் சிரேஷ்டவழக்கறிஞர் திரு ஜி. ஜீ. பொன்னம்பலம் நீதிபதியை நோக்கி சம்பந்தப்பட்ட சாட்சியின் வாய் முறைப்பாடு கொலை நடந்த பத்து அல்லது பன்னிரண்டு நாட்களின் பின்னரே பொலிசாரால் பதியப்பட்டது. இச் சாட்சி வேண்டுமென்றே உருவாக்கப்பட்டஒரு சாட்சியென்று கூறினார்.

எதிரிகளைக் கைவிரலடையாளம் கொடுக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி சாட்சியான ஆறுமுகம் செல்லையா மீது மீண்டும் வாரண்ட் பிறப்பித்தார், மேல் விசாரணை அடுத்த மாதம் 14-ம் 15-ம் திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

... ...

புதிய தலைமை ஆசிரியர்

தாவடி. திங்கள்

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு வி. நடராசா இளைப்பாறியதையொட்டி அவ் வித்தியாசாலையில் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றிய திரு எஸ். சரவணமுத்து தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

... ...

புதிய கழக ஆண்டுவிழா

உடுப்பிட்டி. செவ்வாய்

'மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவை அவசியம். மாணவர்கள் தவறான வழியில் செல்வதைத் தடுக்கக் கல்வியில் அதிக நாட்டம் கொள்ள வேண்டும். மாணவர்களும், மாணவிகளும் சகோதர மனப்பான்மையுடன் பழகுவதன் மூலமே எதிர்கால வாழ்வைச் செம்மையாகவும் சுபீட்சமுன்ளதாகவும் செய்ய முடியும்',

மேற்கண்டவாறு யாழ் கனிஷ்டதொழில் நுட்பக் கல்லூரி மாணவப்பேரவையில் பேசுகையில் போதனாசிரியர் திரு சி. இராமலிங்கம் கேட்டுக்கொண்டார். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு சீ. டா. ஜெயசிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

போதனாசிரியர் திரு. கோமஸ் உட்பட பல்வேறு பகுதிப் போதனாசிரியர்களும், மாணவர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனம் ஒரு கண்ணாடி போன்றது. அதில் பிரதிபலிப்பவை கண்ணாடியின் தன்மையைப் பொறுத்தவையே.

— அன்னை சாரதாதேவி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம்
17-ந் திகதி (3-11-70)

பனை பரிசீலனைக் கமிட்டி

முன்னாள் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் ஐவர் அடங்கிய பனையைப் பற்றிய ஒரு பரிசீலனைக் கமிட்டியை அரசாங்கம் நியமித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். இதுபற்றி 'ஈழநாடு' பன்முறையும் வற்புறுத்தி வந்துள்ளது. சிம்மாசனப் பிரசங்கத்தில் இவ்வித கமிட்டியை நியமிக்கப்போவதாக அறிவித்திருந்தனர். அந்த யோசனையை இப்போது நிறைவேற்றப் புதிய அரசாங்கம் காலதாமதமின்றி முன்வந்தமைக்காக, நாட்டின் பொதுமக்களும் சிறப்பாக, தமிழ்ப்பகுதியிலுள்ள மக்களும் நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவிக்க காரணமுண்டு.

இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பனைமரம் மிகப் பயனுள்ளதாகும். அதன் ஒவ்வொரு பகுதியும் மக்களுக்கு உபயோகமானது. வீடு கட்டவும், உணவுக்கும் அது பயன்படும். அதன் ஓலைகள் கூரை வேயவும், வேலி அடைக்கவும், வெங்காயக் கூடைகள், பெட்டி முதலியன செய்யவும், பதநீரும், பனம் சாறும் பனை வெல்லம் செய்வதற்கும் பழம், உணவுக்கும் இப்படியாக அதன் ஒவ்வொரு பகுதியும் மனிதனுக்கு உபயோகமாவதால் பனையை 'கற்பகதரு' என்றும் கூறுகின்றனர். 'கற்பக விருட்சம்' அதனடியில் இருந்து எது கேட்டாலும் தருமாம். அதேபோல், பனைமரம் மனிதனுக்கான உணவு, குடியிருக்க வீடு முதலிய பல்வேறு காரியங்களுக்கும் உதவக் காத்துள்ளது. ஏராளமான பனைமரங்கள் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் தெற்கில் சில இடங்களிலும் இருக்கின்றன. இயற்கை அன்னை ஈழத்துக்கு அளித்துள்ள இந்தச் செல்வத்தை நாம் சரிவரப் பூரணமாகப் பயன்படுத்தினால், வேலையில்லாத் கஷ்டம் ஓரளவு

உணர்ந்து, இதைப்பற்றிப் பரிசீலனைசெய்ய, நிதானமும் கூர்ந்த அறிவும் மிக்க ஒரு தமிழ் பிரமுகரின் தலைமையில் அமைச்சர் திறமைமிக்க ஐவர் அடங்கிய கமிட்டியை நியமித்துள்ளது மிகப் பொருத்தமாகும். இதற்காக சிறப்பாகத் தோட்டத்தொழில் அமைச்சரைப் பாராட்டவேண்டும்.

அண்மையிலுள்ள தமிழகத்திலே பனை மரத்தை மிக லாபகரமாகப் பயன்படுத்திவருகின்றனர் சென்ற பல வருடங்களாக நல்ல அனுபவம்பெற்றிருக்கிறார்கள். மேற்குறித்த இலங்கைக் கமிட்டி, இலங்கையின் பல பகுதிகளுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்து இச் செல்வத்தைப் பற்றிய பல தகவல்களையும் அறியலாம். இதேசமயம் அவர்கள் தமிழகத்துக்கும் சென்று அங்கு முன்னேறியுள்ள பனைத் தொழிலை பார்த்து அவர்களது அனுபவங்களையும் அறிந்து இங்கு நாம் அவற்றைப் பயன்படுத்தவேண்டும். இந்திய அரசாங்கம் இதற்குவேண்டிய உதவியும் ஒத்துழைப்பும் நல்குமென்றே நம்பலாம்.

தமிழ்பேசும் மக்கள் அதிகமாக வாழும் பகுதியிலுள்ள இந்தச் செல்வத்தைப் பற்றி ஆராயவும், வளர்க்கவும் இந்த அரசாங்கம் முன்வந்துள்ளதன் மூலம், தமிழர் விஷயத்தில் இந்த அரசாங்கத்துக்கு உண்மையில் அக்கறை உள்ளதென்பதைக் காட்டுகின்றது. தமிழ்ப் பொதுமக்கள் இது பற்றி அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, உதவுவார்களென்றே கொள்ளலாம். இதனால் ஈழத்தமிழர் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்பவராவர். இக் கமிட்டியினர் அதிக தாமதமின்றி தங்கள் அறிக்கையை வெளியிடவேண்டும். அவர்கள் கூறும் யோசனைகளை அலட்சியம் செய்யாமல் அவற்றை

ஆட்சி மன்றத்திலே . . .

பட்ஜட் விவாதத்தில் ஜே ஆர்.-பீலிக்ஸ் திறமை

நமது நிருபர்
பெரி சுந்தரலிங்கம்



'பணத்தை எங்கே தேடுவேன்' பணத்தை எங்கே தேடுவேன்' 'கள்ள மார்க்கட்டில் புகுந்து கொண்டாயோ' 'கற்பூரமாகத் தான் எரிந்து போனாயோ' என்று 'பணம்' என்றபடத்தில் பாடி, மக்களைச் சிரிக்கவைத்து, சிந்திக்கவும் வைத்தார் காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

எந்த நாட்டிலும் உள்ள எந்த நிதியமைச்சரையும் வாட்டி வதைக்கும் பிரச்னை தான், இந்தப்பணம் தேடும் பிரச்னை மாற்றும் போற்றும் பொருளாதார நிபுணரான 'டபிள்' டாக்டர் என்.எம். நிதியமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், கலைவாணர் என். எஸ் கேயைப் போல 'பணத்தையெங்கே தேடுவேன்'? பணத்தையெங்கே தேடுவேன்?' என்று அங்கலாய்க்காமல் 'நாட்டுக்குத்தேவையானபணம் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்? அதைஎப்படி எடுப்பது என்றும் எனக்குத் தெரியும் என்று சூளுரைத்துக் கொண்டு செயலில் இறங்கினார்.

என். எம் மின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை

முடியும். என்றாலும் நாங்கள் அதைச் செய்யப் போவதில்லை. பொதுமக்களுக்கு நன்மைபயக்காத விஷயங்களை மட்டும்தான் நாங்கள் எதிர்ப்போம்' என்ற பூர்வ பீடிகையுடன் தன்துபேச்சை ஆங்கிலத்தில் ஆரம்பித்தார் ஜே. ஆர்.

ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டதிலிருந்து, ஜே ஆரின் பேச்சுப்பாணியில் புதியதொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆட்சிமன்றத்திலே எதிர்க்கட்சியினர் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவினரான படிக்கேற்ப ஏராளமானமாற்றங்களைச் செய்யவேண்டியயேற்படுகிறது' என்றார்.

மந்திரவாதிகள் தொப்பிக்குள்ளிருந்து முயல்களை வெளிக்கொணருமாற்போல தனது மேசைக்கடியிலிருந்து 'ஐஸாக் டோச்சர்' என்பவர் எழுதிய பல புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து 'சோவியத் ரஷ்யாவிலே கம்யூனிஸ்டுகளின் கனவு நாட்டிலே-லெனினுக்குப்பின் ஸ்டாலின் ஆட்சியிலேஎன்னென்ன நடந்தது? ஏன் நடந்தது? என்பதையறிய இவற்றைப் படித்துப் பாருங்கள் என என். எம்.

நாட்டை இட்டுச் செல்கிறது என்று முத்தாய்ப்பு வைத்தார்.

'யு என். பி. சொல்லும் ஜனநாயக சோஷலிஸமோ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சொல்லும் சோஷலிஸ ஜனநாயகமோ ஒரு தலைமுறையில் செயல்படுத்திவிடமுடியாது. ஏனென்றால் ஓர் ரத்தப்புரட்சியின்பின்னும் கூட கம்யூனிஸ சமுதாயத்தை ரஷ்யாவில் நிறுவ முடியவில்லைஎன்று தொடர்ந்த ஜே, ஆர். இன்றைய ரஷ்யாவில் மதுவெறி விவாகரத்தும் வீடின்மையும் மூன்று பெரிய பிரச்னைகளாக உருவெடுத்துள்ளன என்று சொல்லி கம்யூனிஸத்தால் எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்க முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட முனைந்தார்.

என் எம். மின் திட்டப்படி இந்த நாட்டில் உள்ள தனியார்துறையினர் எல்லாப் பக்கங்களிலும் நசுக்கப்படுகின்றபடியால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம்தான் மிக உக்கிரமாக தலைவிரித்தாடப் போகிறது என்று எச்சரித்த ஜே. ஆர். ஒரு வருடத்துக்குள் இதுநடைபெறப்போகிறது, இல்லையா என்று இருந்து பாருங்கள் என ஆட்சியாளருக்குச் சவால் விட்டார்.

மே மாதம் 27-ம் திகதி பொதுத் தேர்தலின் வாயி

பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அடுத்த பேச்சாளர். ஜே, ஆரைப் போலவே, இவரும் நிதி அமைச்சராக இருந்து அனுபவப்பட்டவர்; ஆட்சிமன்ற விவாதங்களில் கைதேர்ந்தவர்.

''எந்தநாட்டிலும், எந்த நிதியமைச்சரின் எந்த வரவு செலவுத்திட்டமும், நாட்டில் உள்ள எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியாதுதான்'' என்று ஆரம்பித்து, 'இந்த நாட்டில் இதுவரை எந்த நிதியமைச்சரும், என்னையும் (ஜே. ஆரைச் சுட்டிக்காடி) உங்களையும் சேர்த்து, செய்ய முடியாததை. செய்ய முயலாததை முதன்முறையாக (டாக்டர்என்.எம்.)செய்து, முற்றான, யதார்த்த பூர்வமான, அருமையான 'பட்ஜட்டை' உருவாக்கியிருக்கிறார்'' என்று பாராட்டி முடித்த பீலிக்ஸ், சுமார் இரண்டு மணித்தியாலம் ஜே. ஆரின் வாதங்களைச் சமாளிப்பதில் செலவிட்டார்.

வரவு-செலவுத் திட்டம் நல்லதா? மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதா? இல்லையா? என்பதை எந்தப் பொருளாதார நிபுணனையும் விட திறமையாகத் தீர்த்துவைக்கக்கூடியவர்கள் மக்கள் தான் என்று மக்கள் குரலே மகேசன் குரல் என்பதை கோடிட்டுக் காட்டிய பீலிக்ஸ் ''ஐக்கியதேசியக் கட்சி சமர்ப்பித்த வன்னிநாயக்காவின் ஐந்து வரவு-செலவுத் திட்டங்களையும் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் தான் இன்று ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி பீடத்திலிருந்து இறக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறி ஆரம்பித்தார்.

தனியார் துறை, தனியார்

சொல்லம்புகள்

ஜே. ஆர்: ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலும் குற்றவாளிகள்- கிரிமினல் குற்றவாளிகள்- இருக்கிறார்கள்தான். ஆனால் பிரதமரையே கொலைசெய்யக்கூடிய குற்றவாளிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில்தான் இருக்கிறார்கள்: அந்த அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்னும் வரவில்லை!

0 0 0

ஜே. ஆர்: மூலதன வரி ஒரேமுறைதான் விதிக்கப்படும்; அப்புறம் விதிக்கப்படமாட்டாது என்கிறார் நிதியமைச்சர்; ஆமாம் மூலதனவரி, மரணதண்டனையைப் போலத்தான் இருக்கிறது. ஒருமுறை விதிக்கப்பட்டவுடன், மறுமுறை ஆளே இருக்கமாட்டானே!

0 0 0

ஜே. ஆர்: நாட்டின் மிகப்பெரிய, ஏகபோக புடவை உற்பத்தித் தொழிற்சாலையான துல்ஹிரிய தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடந்து, உற்பத்தி தடைபட்டால் அமைச்சர்கள்கூட அம்மணமாகத்தான் போகவேண்டியேற்படும்! (சிரிப்பு) அரசாங்கம் வேண்டுமானால் துல்ஹிரிய தொழிற்சாலையை நட்டத்தில் நடத்தும் ஆனால் தனியார் துறையினர் அப்படி நடத்தமுடியாது!

0 0 0

ஜே. ஆர்: இந்த வரவுசெலவுத்திட்டயோசனைகள் [...]ாக அமுல் நடத்தப்பட்டால், அடுத்த [...]ஜட்டுக்குள் இந்த நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் தான் தலைவிரித்தாடும்; அடுத்த ஆண்டுக்குள் எனது வாக்குப் பலிக்கின்றதா இல்லையா என்று பாருங்கள்!

0 0 0

பீலிக்ஸ் [...] துபோன [...] த்தில் [...] கள் பறக்கவைக்காட்டுவதைப் போலத்தான் எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சும்.

ஆசிரியருக்குக் கடிதம்

தடை உத்தரவல்ல வெளி நடப்பு

21-10-70ந் திகதி நடைபெற்ற சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொதுஜன மலசலகூடம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற இச்சபையின் 20-3-70ந் திகதித் தீர்மானத்தை, தலைவர் செயல்படுத்தத் தவறியதையொட்டிய விடயம் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தலைவருக்கும் எனக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சபைச் செயலாளருக்கு நான் வெளியேறுவதாகக் கூறி சபைக் கூட்ட மண்டபத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தேன்.

சபையில் தகாத வார்த்தை பிரயோகித்ததாக வெளிவந்ததும் உண்மையல்ல. நான் சபை நிகழ்ச்சியில் பங்குபற்றியிருந்த நேரத்தில் என்மீது தடை உத்தரவு பிறப்பிக்கும் ஒரு பிரேரணையோ. தீர்மானமோ இடம்பெறவில்லை.

என்மீது தடை உத்தரவு பிறப்பித்திருப்பதாக 25-10-70 ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த செய்தி சரியல்ல.

எனக்கு நகரசபைத் தலைவரிடமிருந்து எந்தவித அறிவித்தலும் கிடைக்கவுமில்லை.

க மயில்வாகனம்
9ம்வட்டார அங்கத்தவர்
நகரசபை
சாவகச்சேரி.

இளைப்பாறினர்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு தபால் நிலையத்தில் 22 வருடங்களாகத் தபால் விநியோகம் செய்து வந்த திரு. செல்லப்பாவும், மேற்படி தபால் நிலையத்தில் 23 வருடங்கட்கு மேலாகத் தபால் விநியோகஸ்தராகவும் பின்பு தபால் தரம் பிரிக்கும் உத்தியோகஸ்தராகவும் கடமையாற்றிய இடைக்காட்டைச் சேர்ந்த திரு. புதியார் ஆறுமுகமும் சேவையினின்றும் இளைப்பாறினர்.

முதலிடம் கொடுக்க வேண்டும்

உடுப்பிட்டி, திங்.

இலங்கை விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் ஒரு வருட பயிற்சி பெற்ற பழைய மாணவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலும், கிழக்கிலும் தெற்கில் சில இடங்களிலும் இருக்கின்றன இயற்கை அன்னை ஈழத்துக்கு அளித் துள்ள இந்தச் செல்வத்தை நாம் சரிவரப் பூரணமாகப் பயன்படுத்தினுல், வேலை யில்லாக் கஷ்டம் ஓரளவு குறைவதுடன், நாட்டின் பொருளாதாரமும் உயர்வ தாக இருக்கும். நமக்குத் தேவையான சீனியை இங்கேயே உற்பத்தி செய்து நமது செலாவணி வெளி யேருமல் ஓரளவு தடுத்துக் கொள்ளலாம். புதிய அர சாங்கம் இதன் முக்கியத்தை

[illegible] தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்பவ ராவர். இக் கமிட்டியினர் அதிக தாமதமின்றி தங்கள் அறிக்கையை வெளியிட வேண்டும் அவர்கள் கூறும் யோசனைகளை அலட்சியம் செய்யாமல், அவற்றைப் பரிசீலனை செய்து, கூடிய விரைவில் அவற்றை அமுல் நடத்த எல்லா நடவடிக்கை களையும் அரசாங்கம் எடுத்து சிறப்பாக ஈழத்துத் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெறுவ ரென்றே எதிர்பார்க்கின் ருேம்.

'ஈழநாடு' ரமழான் குரலொலி



''மங்கையர் இருவர் மாநபி காலத்தில் நோன்பு நோற்றனர். மதியம் கடந்து பிற்பகலானபோது, இருவரின் உடலிலிருந்தும் உயிர் அகன்றுவிடுமோ என எண்ணுமளவுக்கு அவ்விருவரையும் பசியும், தாகமும் வாட்டி வதைத்தன. (தாங்கமுடியா தாகமும் குடலைப் பிடுங்கும் பசியும் பொறுமை இழக்கச் செய்ததால்) இறைதூதர் நபியிடம், இடைவேளையில் நோன்பை விட்டுவிட அனுமதி கோரி ஆளனுப்பினர்,

அண்ணலார் (ஸல்) அவ்விரு மாதிடமும் பாத் திரம் ஒன்றை அனுப்பி இருவரும் உட்கொண்ட வற்றை அதனுள் கக்கிவிடும்படி கட்டளையிட்ட னர். கட்டளைக்கேற்ப ஒரு பெண் சுத்தமான இரத்தத்தையும் மலர்ந்த மாமிசத்தையும் வாந்தி எடுத்து பாத்திரத்தின் பாதியை நிறைத்தனள். மறுபாதியை அடுத்த மங்கை முன்னவள் போல் செய்து முடித்தனள். (இதை) பார்த்தோர் அனை வரும் வியப்புறக்கண்டுவேந்தர் நபி (ஸல்) விளக்கி கூறினுர்;

இவ்வேந்திலை இருவரும் இறைவன் அனு மதித்தவற்றிலிருந்து தங்களை (நோன்பு நோற்று) பாதுகாத்துக்கொண்டனர். இன்னும், தடைவிதிக் கப்பட்டவற்றை தடுத்துக்கொள்ளாதுவிட்டனர், ஒருத்தி மற்றவளிடம் அமர்ந்து மனிதர்களைப் பற்றி புறம் (ஈபத்) பேசி (பொழுது போக்கி)னர். அவர்களின் மாமிசத்திலிருந்து இருவரும் உட் கொண்டவைதான் இது.''

(அல்ஹதீஸ்: ஆதாரம்: அஹ்மத்: மூலம்: இஹ்வா)

வாயையும் வயிற்றையும் உண்பதிலிருந்தும் குடிப்பதிலிருந்தும் தடுத்துக்கொள்வதால் மாத் திரம் நோன்பு நிறைவேறிவிடாது. ஒவ்வொரு அவயவங்களும் பாவத்திலிருந்துபாதுகாக்கப்படல் வேண்டும். அதிகமாக பாவங்கள் விளைவதற்கு நாவே மூலகாரணம். எனவே நாவுக்கு நற்பயிற்சி அளிப்பது அவசியம்,

அல்லாஹ் நம்மனைவரின் நோன்பையும் புனிதப் படுத்துவானுக! ஆமீன்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

சுபஹு	உதயம்	ளுஹர்	அஸர்	மஃரிப்
4-38	5-58	12-20	3-17	5-52

இஷா	சஹர்முடிவு
7-12	4-23

என்று எனக்குத் தெரியும்? அதைஎப்படி எடுப்பது என்றும் எனக்குத் தெரியும் என்று சூளுரைத்துக் கொண்டு செயலில் இறங்கினுர்.

என். எம்மின் சொல்லுக் கும் செயலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை, அக்போடாபர் 25ம் திகதி அவர் சமர்ப்பித்த (இந்த நாடு சுதந்திரம் பெற்றபின்) 23-வது வரவு செலவுத்திட் டத்தின்போது நாடு காணக் கூடியதாக இருந்தது'

வரவு-செலவுத் திட்டத் தின் ஓர் அம்சமான 'பணப் பதுக்கல் வேட்டை' சாதக பாதகங்களை அலசி ஆராய் ந்து கொண்டு, நாடே அல் லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக் கும்வேளையில், ஆட்சி மன் றத்தில் வரவு-செலவுத் திட் டத்தின் மீதான விவாத மும் ஆரம்பமாகிவிட்டது

முதல் நாள் விவாதத்தில் முதல் பேச்சாளர் எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனு.

ஜே. ஆரும், என். எம் மும் ஒன்ருகப்படித்தவர்கள், ஒரே ஆசானின்கீழ். பேரா சிரியர் தோமஸ் எனபார் கீழ், பொருளாதார பாடம் கற்றவர்கள். ஆரம்பகாலத் திலே இருவருமே மார்க்ஸி ஸப் பொருளாதார. அரசி யல் தத்துவங்களைப்பின் பற்றி அவற்றைப்பற்றிய புத்தகங்களில் புதையுண்டு கிடந்தவர்கள். டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, அன்ருெருநாள் வேடிக்கை யாகக் குறிப்பிட்டது போல் இளமைக் காலத்திலேயே மார்க்ஸிஸ, கம்யூனிஸ நூல் களைப் படித்தவர்களில் ஒரு வர் (ஜே.ஆர்) காலப்போக் கில் படித்த நூல்களையும், கற்ற தத்துவங்களையும் மற ந்துவிட்டு புதுவழியில் புறப் பட்டுச் சென்றதால்தான் இன்று எதிர்கட்சியில் உட் கார்ந்திருக்க வேண்டிய பரி தாபகரமானநிலை ஏற்பட்டி ருக்கிறதாம்.

'என். எம். மின் 'பட்ஜட்' இந்த நாட்டில் உள்ள தனி யார் துறையை பூண்டோடு அழித்தொழித்து, ஸ்டாலின் போன்ற சர்வாதிகாரிகளின் இரும்புக்கரங்களில்நாட்டை ஒப்படைத்து கம்யூனிஸ ஆட்சி உருவாகத்தான் வழி வகுக்கப்போகிறது' -இது தான் ஜே ஆரின் இன்றை யப் பேச்சுக்கு அடிப்படை யாக அத்திவாரமாக அமை ந்த கருத்து.

'எண்ணிக்கையிலே- இந் தச்சபையினுள்ளே. நாங் கள் மிக மிகச்சிறிய அளவி னராக இருந்தாலும் வெளியிலே, நாட்டிலே எங்களுக்குள்ள ஆதரவைக் கொண்டு தேவையானுல் இந்த ஆட்சிக்குத் தொந் ரவு கொடுக்க எங்களால்

[illegible]ங்கள் இந்த நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் தான் தலைவிரித்தாடும்; அடுத்த ஆண்டுக்குள் எனது வாக்குப் பலிக்கின்றதா இல்லையா என்று பாருங்கள்!

0 0 0

பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா: வயதுபோன [illegible]ங்களும், வயதுபோன காலத்தில் [illegible]கள் பற்களைக்காட்டுவதைப் போலத்தான் எதிர்[illegible]ட்சித் தலைவரின் பேச்சும்.

ஓர் உறுப்பினர்: ஆனுல் அவை பொய்ப்பற்கள் அல்லவே...

பீலிக்ஸ்: பொய்ப்பற்கள் அல்ல; ஆனுல் இடை விழுந்த, ஆட்டம்காணும்பலமில்லாப்பற்கள்! (சிரிப்பு)

0 0 0

பீலிக்ஸ்: 1958-ல் நடந்தவை நமது நாட்டின் வரலாற்றில் சோகம் படிந்த அத்தியாயம்; இனி மேல் அப்படியானதொரு நிகழ்ச்சி நிச்சயமாக நடை பெருது; அதற்கான வாய்ப்பும் வராது.

0 0 0

பீலிக்ஸ்: எந்தவொரு சிங்களவனும் தமிழ் படிக்கப் போகிறேன் என்று என்னிடம் சொன்னுல் அவனைத் தடுக்கமாட்டேன்; அப்படிச்செய்ய நான் வெட்கப்படுவேன். ஆனுல் அதைத்தான் உங்களில் சிலர்செய்கிறீர்கள்; சிங்களம்படிக்கவிரும்பும்தமிழர் களைத் தடுக்கின்றீர்கள்.

0 0 0

பீலிக்ஸ்: நோயாளிக்கு வெறும் மருந்துகளை கொடுத்துக்கொண்டிருந்தால் மட்டும் போதாது; நாடித்துடிப்பு, இதயத்துடிப்பு நின்றுவிடாமலி ருக்க, சில வேளைகளில் இருதயத்தை 'மஸாஜ்' செய்துவிடவும் வேண்டியதிருக்கும். பதுக்கல் பண வேட்டையும், இப்படி இருதயமே நின்றுவிடாமல் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிதான்.

0 0 0

தஹநாயக்கா; யூ. என். பி 'எம்பாம்' செய்யப் பட்ட பிரேதத்தைப்போலத்தான் இப்போது இருக் கிறது!

0 0 0

பீலிக்ஸ்: மூலதனவரியைப்பற்றிக் கேள்விப்பட்ட வுடன் எனது மாமியாரும் ஆரம்பத்தில் பயந்து போனுர்; நான் விளக்கியவுடன் வன்னிநாயக்கா விதித்த வரிகளைவிட குறைவாகவே செலுத்தப் போவதை அவர் உணர்ந்து ஆறுதலடைந்தார். மூலதனவரி சும்மா நுளம்புக்கடிக்கு ஒப்பானதே!

யாலோ என்னவோ ஜே ஆர் கடந்த ஐந்தாறு மாதங்க ளாக எந்தவிஷயத்தையும் கேலியும் கிண்டலும் நகைச் சுவையும் நையாண்டியும் கலந்தபாணியிலேயே அணுக ஆரம்பித்துள்ளார். சொல்ல வேண்டியவற்றைச் சொல் லாமல் விடுவதில்லையென்ரு லும் அதனை இதமாக குத் தாமல் குத்திக்காட்டிப் பேசுவார்.

ஆனுல் இன்றைய வரவு செலவுத் திட்ட விவாதப் பேச்சு இந்தப் பாணியிலி ருந்து சற்றே மாறி மிக சீரியசாக இருந்தது குறிப் பிடத்தக்கது.

'சும்மா மார்க்ஸிஸ, கம்யூ னிஸ, ஜனநாயக. சோஷ லிஸ மந்திரங்களை ஜபிப்ப தால் மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது என்ற ஜே ஆர் தனது இளமைக் கால மார்க்ஸிஸ அனுபவங் களை நினைவுபடுத்தி நானும் இளமைக்காலத்தில் கொள் கைவாதி தான்வயதுபோகப் போக யதார்த்தவாதியாகி விட்டேன்; மார்க்ஸிஸகோட் பாடுகளும் தத்துவங்களும் புத்தகத்தோடு சரி நடை முறையில் செயல்படுத்தும் போதுதான் யதார்த்த நிலை முக்கு அறிவுரை வழங்கினுர் ஜே. ஆர்.

என். எம் அந்தப் புத்தகங்கள் எல்லாம் என்னிடமும் இருக்கின்றன!

ஜே. ஆர்.: புத்தகங்கள் வைத்திருந்தால் போதாது; அவற்றைப் படித்தும்பார்க்க வேண்டும். (சிரிப்பு)

'கம்யூனிஸம்தான் இந்த நாட்டிலுள்ள பிரச்சினை களுக்கெல்லாம் பரிகாரம் என்பதை நாங்கள் நிச்சய மாக எற்றுக்கொள்ளவில்லை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்ற ஜே. ஆர். அதேநேரத் தில் கடிவாளமில்லாக் குதிரையாக முதலாளித்து வத்தைக் கட்டவிழ்த்து விட வும் நாங்கள் தயாராக இல்லை இரண்டுக்கும் இடைப்பட்ட பாதை ஜன நாயக சோஷலிசம்தான் நாங்கள் ஏற்றுக் கொண்ட வழி, அதே போல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக் கொண்ட வழி! என்று சொல்லிவிட்டு என். எம், மின் பட்ஜட்டோ இந்த நடுவழியினின்று வெகு தூரம் விலகிப்போய் கம்யூ னிசப் பாதையிலே இரத்தக் களறியை உண்டுபண்ணும் சர்வாதிகாரப் பாதையிலே

[illegible] ஜே. ஆர். ஒரு வருடத்துக்குள் இது நடை பெறப்போகிறது, இல்லையா என்று இருந்து பாருங்கள் என ஆட்சியாளருக்குச் சவால் விட்டார்.

மே மாதம் 27-ம் திகதி பொதுத் தேர்தலின் வாயி லாக இந்த நாட்டிலே ஒரு புரட்சி ஏற்பட்டதென்று ஏற்றுக்கொண்ட ஜே ஆர். ஆனுல் அந்தப் புரட்சிஇரத் தக்கறை படிந்த புரட்சி யல்ல என்று சுட்டிக்காட்டி இன்றைய அரசாங்கத் தலை வர்கள் ரஷ்யாவில் லெனி னைப் போன்றவர்க்ள் என்று ஏற்றுக்கொண்டாலும்இவர் கள் இன்று வகுக்கும் திட் டங்களால் லெனினுக்குப் பின் ரஷ்யாவில் தோன்றிய ஸ்டாலின், குருஷ்சேவ் பிரஸ் னவ் போன்ற சர்வாதிகாரி களை இலங்கையிலும் உரு வாக்கி விடுவார்கள் என்று அச்சம் தெரிவித்தார்.

புரட்சிகள் எல்லாம் இறுதி யில் சர்வாதிகாரிகளைத் தான் தோற்றுவித்திருக்கின் றன என்பதை நிரூபிக்க ரஷ் யப் புரட்சி ஸ்டாலினையும் பிரெஞ்சுப்புரட்சி நெப் போலியனையும் உருவாக்கி யதை சுட்டிக்காட்டிய ஜே. ஆர். இலங்கையிலும் இப் படியான புரட்சிகளுக்குப் பின் ஸ்டாலின் போன்று இரத்தக்கறை படிந்த ஆட்சி நடத்தும் சர்வாதிகாரிகளை இன்றைய அரசாங்கத்தின் திட்டங்கள் குறிப்பாக என். எம். பட்ஜட் திட்டங்கள் உருவாக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று திருப்பித்திருப்பிக் கேட் டார்.

இறுதியாக ஜே. ஆர். கூறிய வாசகங்ள் இவை. 'இந்த வரவுசெலவுத் திட் டம் கமயூனிஸப் பாதை யில் நாட்டை இட்டுச் செல்கிறது; அதுதான் இன்றைய ஆட்சியின் நோக்கம் என்ருல் பொது மக்களிடையே அதற்கு இன்றுள்ள செல்வாக்கை வெகுவிரைவில் இழந்து எதிர்க் கட்சிகளின் அமோக வெற்றிக்கு வழி வகுக்கும் (சிரிப்பு)எங்களை (யு,என்,பி) பொறுத்த வரையில் கம்யூனிஸப் பாதையில் செல்லநாங்கள் தயாராக இல்லை, இன்றை யப் பிரதமர் அந்தப் பாதையில்தான் செல்ல விரும்புகிருரோ என்றும் எங்களுக்குத் தெரியவில்லை ஆனுல் அந்தப் பாதையில் கம்யூனிசப் பாதையில் சென்ருல் அதுவே இந்த நாட்டின் அழிவுக்கு இந் தச்சபையின் அழிவுக்கு பேச்சு சுதந்திரம் வாக்கு சுதந்திரம் தேர்தல்சுதந்தி ரம்ஆகியவற்றின் அழிவுக்கு வழிவகுக்கும்,

[illegible] மக்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் தான் இன்று ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி பீடத்திலிருந்து இறக்கப் பட்டிருக்கிறது' என்று கூறி ஆரம்பித்தார்.

தனியார்துறை, தனியார் துறை என்று வக்காலத்து வாங்குகின்ற ஜே ஆரைப் பார்த்து சுதந்திரம் பெற்ற இந்த 23 ஆண்டுகளில் உங் களது தனியார்துறை நாட் டின் பொருளாதார அபி விருத்திக்கு என்ன பங்கு செலுத்தியிருக்கிறது என்று சொல்ல முடியுமா என்று கேட்டார்.

தனியார்துறையில் ஏக போகமாகக் குறைந்து விட்ட லாபமெல்லாம் தக்க துறைகளில் தக்க தரு ணத்தில் முதலீடு செய்யப் படாததால் தான் நாட்டின் பொருளாதார முன்னேற் றம் பெருமளவு பாதிக்கப் பட்டிருக்கிறது என்பது பீலிக்ஸின் எதிர்வாதம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் அக்கறை தனி யார் துறையினருக்கு இருந் தால் 1948லிருந்து 1960-ம் ஆண்டில் அரசாங்கமே டயர் தொழிற்சாலை ஒன் றினை உருவாக்கும் வரை ஏன் தனியார்துறை அப்படி யான தொழிற்சாலையை உருவாக்க முயற்சிக்கவில்லை? என்று கேட்டார் பீலிக்ஸ், நமது நாட்டிலேயே கிடைக் கக்கூடிய மூலப் பொரு ளான றப்பரைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை உரு வாக்காமல் வெளிநாடுகளி லிருந்து கோடி கோடி யாகச் செலவழித்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்து இங்கே இறக்குமதி செய்யப்பட்ட பொருள் களின் விலையை விட அதிக விலையில் பொருட்களை உற் பத்தி செய்யும் தொழிற் சாலைகளை மட்டும் ஆரம் பிக்க தனியார்துறை அக் கறை கொள்வது ஏன்? என்று அர்த்தபுஷ்டியான கேள்வியையும் கேட்டார் பீலிக்ஸ்,

மதிய உணவு இடை வேளைக்குப்பின் தொடர்ந்து பேசிய பீலிக்ஸ் தேசிய ஒற் றுமை, தேசிய ஒற்றுமை என்று பேசிக்கொண்டு போலித் தேசிய ஒற் றுமையை வளர்க்க முடி யாது நாட்டு நலனில் உண்மையான நாட்டத் துடன் எல்லோரும் ஒன்று பட்டு ஒரு மனதுடன் உழைத்தால் தான் உண்மை யான தேசிய ஒற்றுமை ஏற்பட முடியும் என வலி யுறுத்தினுர்.

வேண்டும்

உடுப்பிட்டி, திங்.

இலங்கை விவசாயப் பயி ற்சிப் பாடசாலையில் ஒரு வருட பயிற்சி பெற்ற பழைய மாணவர்களுக்கு விவசாய உதவியாசிரியர் நியமனத்தில் முதலிடம் கொடுக்கவேண்டுமென்று விவசாயப் பயிற்சிப் பாட சாலை பழைய மாணவர் சங் கம் கல்வியமைச்சரை மக ஜர் மூலம் கோரியுள்ளது.

வாக்குச்சீட்டு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியமளிக்கையில் தொடர் ந்து கூறியதாவது: நோட்டீ ஸில்உள்ள சுயநலவாதி பொதுநல விரோதி, சுரண் டித்தின்னும் ஆகியவார்த் தைகள் சாதாரணமாக எங் கள் பகுதியில் பாவிக்கப்படு வதுண்டு, சுரண்டித்தின்னும் என்ருல்ஒருவர்சட்டவிரோத மாக பணம்சேர்த்து அதன் மூலம் சீவிப்பது என்பதா கும்.

அசீஸ் மரைக்காரை, அப் துல் அசீஸ் மரைக்காயரென் றும் கூறப்படுவதுண்டு, அசீஸ் 1 வருடமாக சுகவீன முற்றிருந் து எனக்குத்தெரி யாது அவர் 2 தடவை ஆஸ் பத்திரிக்குச் சென்றது பற்றி யும் எனகுத் தெரியாது 65ம் ஆண்டு தேர்தலில் அவர் என்னை ஆதரித்தார். கடந்த தேர்தலில் என்னை ஆதரிக்கவில்லை.

எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எச். டி. தம்பையா குறுக்கு விசா ரணைசெய்கையில் ரஹீம் கூறியதாவது: மன்சூர் பட் டின சபையில் இரு பிரிவாக இருக்கின்றனர். 7 பேர் உள்ள சபையில் தலைவருக்கு ஆதரவாக 4பேரும், மற்றப் பிரிவில் 3 பேரும் இருந்தனர் கடந்த தேர்தலுக்கு முன் மற்ருெருவர் என்னுடன் சேர்ந்துகொண்டார்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாட்டில் எந்த ஒரு மனிதனும் தான் பேசு கின்ற மொழியின் காரண மாக பாகுபாடாக நடத்தப் படமாட்டான் என்று உறுதிமொழிய வழங்கிய அமைச்சர் அதே மூச்சில் உத்தியோக மொழியான சிங்களத்தை ஏற்றுக் கொண்டு சிங்களம் படிக்க முயற்சித்த எந்த ஓர் அர சாங்க உத்தியோகத்தரும் இதுவரை பாதிக்கப்பட்டி ருக்கிருரா? என்று கேட்டு இல்லையே! என்று பதிலும் அளித்தார்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலு [illegible] அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org